ஆரம்பக் கல்வி

ஆகஸ்டு—1957

வீரபாண்டியக் கட்டபொம்மு

JL
T15m21' N40
N57.18.8.
186320.

ஆரம்பக்கல்வி ஆபீஸ், 94, 95, புதுதெரு, மண்ணடி, சென்னை

ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBA KALVI" OFFICE

94-95, NEW STREET, MANNADY P. O., MADRAS-1.

POST BOX No. 1818.

"ஆரம்பக்கல்வி" இனாம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் எமது "**புதுமுறை சங்க வாசகங்களை**" அல்லது "**வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை**" பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50–க்குக் குறையாமல் இதர பாடபுத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "**ஆரம்பக்கல்வி**" மாதப் பத்திரிகையை இனாமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும். மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் கீழ்க் குறித்துள்ள தொகைக்குத் தபால் ஸ்டாம்புகளை (Postal Stamps) வாங்கிக் கவரில் வைத்து அல்லது மாதிரிப் பிரதிகளுக்கு அனுப்பவேண்டிய தொகை ஒரு ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அந்தத் தொகையை M. O. மூலம் அனுப்பவும்.

ஆரம்பப் பள்ளிகளுக்கான எமது வெளியீடுகள்

புதுமுறை சங்க வாசகம்

பி. வீரராகவன்.

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0 4 0	8	4–5–'55
இரண்டாம் வகுப்பு	0 5 0	22	19–5–'54
மூன்றாம் வகுப்பு	0 7 0	23	19–5–'54
நான்காம் வகுப்பு	0 8 0	23	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0 9 0	23	19–5–'54

இந்த ஐந்து புத்தகங்கள் மட்டும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 1—0—0 அனுப்பவும்.

808/3-71

ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா

மலர் 18 ஆகஸ்டு 1957 இதழ் 8

186320

அவர்களை மட்டுமல்ல! இவர்களையும் கவனியுங்கள்

இந்தியத் துணைக்கண்டம் முழுதிலும் ஒரு பரபரப்பு—என்ன வருமோ, ஏது சேருமோ என்கிற அச்சம்—உற்றார் உறவினருக் கெழுதும் சீட்டினால் அது போய்ச் சேருமோ சேராதோ என்கிற துடிதுடிப்பு—மிக நெருங்கிய உறவினர்களின் உடல் நிலை அபாயம், மரணம், ஆபத்துச் செய்தி முதலியவற்றை எப்படி அனுப்புவது என்கிற கவலை—வாணிபத் துறை பற்றிய அவசரச் செய்திகளையும் தகவல்களையும் வெளியூர்கட்கு எவ்வாறு அனுப்புவது என்கிற ஆயாசம்—வெளியூர்களில் உள்ள பெற்றோரிடமிருந்தும் மற்றோரிட மிருந்தும் மணியார்டர் மூலம் பணம் பெற்று வாழ வேண்டியவர் களின் உள்ளத்தில், இனி அந்த முறையில் பணம் பெற முடியாதே, யாது செய்வது பணத்திற்கு என்கிற மனக் குழப்பம்......

ஆம்! இத்தனைக் குழப்பங்களும் அச்சங்களும் எண்ணங்களும் துடிதுடிப்புகளும், ஜுலை மாதத்துக் கடைசி வாரத்திலும், ஆகஸ்டு மாதத்து முதல் வாரத்திலும், இந்தியா முழுதிலுமுள்ள பொதுமக்களின் உள்ளங்களை ஆட்டிப்படைத்தன.

பொதுமக்களின் உள்ளங்களில் மட்டுமல்ல, மத்திய அரசாங்கத்து அமைச்சர்களின் உள்ளங்களிலும், அரசாங்கப் பணிகளை எவ்வாறு நடத்திச் செல்வது என்கிற ஆயாசம் அரசோச்சத் தொடங்கியது.

இத்தனைக் குழப்பங்களுக்கும் கொந்தளிப்புக்கும் மூல காரணமாய் விளங்கியது, மத்திய அரசாங்க ஊழியர்களின் வேலை நிறுத்த முன்னறிவிப்பே ஆகும்.

விலைவாசிகள் எல்லாம் தங்களால் எட்டிப் பிடிக்கமுடியாத உயரத்திற்குப் பறந்து சென்றுவிட்ட காரணத்தால் தங்களுடைய ஊதியத்தைக் கணிசமான அளவுக்கு உயர்த்த வேண்டுமென்றும், எந்த அளவுக்கு உயர்த்துவது என்பதை ஆராய்ந்து அறிந்து தெரிவிப்பதற்காகப் புதியதோர் ஊதியக் குழுவினை (Pay Commission) நியமிக்க வேண்டுமென்றும், அந்தக் குழுவின் அறிக்கை வெளி வருவதற்குள்ளாக, இடைக்கால நிவாரணமாக உடனடி ஊதிய உயர்வு எதாவது அறிவிக்கப்பட வேண்டுமென்றும், இந்த ஏற்பாடுகளை யெல்லாம் மத்திய அரசாங்கத்தார் ஆகஸ்ட்டு திங்கள் எட்டாம் நாள் வியாழக்கிழமைக்குள் செய்து முடிக்காவிட்டால், தாங்கள் அனைவரும், அன்றைய இரவு 12 மணி முதல் வேலை நிறுத்தம் செய்ய இருப்பதாகவும், இந்தியப் பேரரசின் ஊழியர்களில் மிகப் பெரும்பாலோர், ஜுலை மாத நடுவில் அறிவித்திருந்தனர்.

அனைத்திந்திய தபால் தந்தி ஊழியர்கள் கழகம், அனைத்திந்திய வருமான வரி கெஜட் பதிவில்லாத ஊழியர்கள் கழகம், அனைத்திந்திய கடல் சுங்க (Customs) ஊழியர்கள் கழகம், சிவில் விமானப் போக்குவரத்து சிப்பந்திகள் கழகம், அனைத்திந்திய ஆடிட்டர்கள் அக்கௌண்டண்ட்டுகள் கெஜட் பதிவில்லாத ஊழியர்கள் கழகம், இந்திய அரசாங்க ஸ்டேஷனரி அலுவலக ஊழியர்கள் நிறுவனம், இந்திய அரசாங்க பாம்ஸ் பிரஸ் ஊழியர்கள் மன்றம் ஆகிய ஏழு பெரிய கூட்டுக் கழகங்களின் சார்பில், இந்த வேலை நிறுத்த அறிவிப்பு இந்திய அரசாங்கத்திற்குத் தரப்பட்டிருந்தது.

இந்த ஏழு மன்றங்களில் ஏறத்தாழ ஐந்து இலட்சம் பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். தபால் தந்தி ஊழியர் மன்றத்தில் மட்டும் கிட்டத் தட்ட மூன்று இலட்சம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இந்த ஐந்து இலட்சம் ஊழியர்களும் வேலை

நிறுத்தம் செய்திருந்தால், அதனால் இந்திய அரசாங்க வேலைகள் முழுவதும் நிலைதடுமாறிப் போயிருக்கும் என்பதும், பொதுமக்களுக்கும் அதனால் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அளவிட்டு உரைக்க முடியாத துயரங்களும் தொல்லைகளும் உருவாகியிருக்கும் என்பதும், எவராலும் மறுக்க முடியாத உண்மைகள் ஆகும்.

ஆனால் கடைசி நேரத்தில், இந்திய அரசாங்கத்தார், ஊழியர்கள் விரும்பியதற்கு ஏற்ப இரண்டாவது ஊதியக் குழுவை நியமித்ததாலும், இடைக்கால நிவாரணப் பிரச்சினையையும் அந்த ஊதியக் குழுவினரே கவனித்துத் தகுந்த தீர்ப்பு அளிப்பார்கள் என்று அறிவித்ததாலும், பொதுமக்களின் கழகங்கள் பலவும் இந்த வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்கவும், ஊழியர்கள், தங்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு விட்டனர்.

வேலை நிறுத்தம் நடைபெறவில்லை என்றாலும், எந்தக் காரணத்திற்காக வேலை நிறுத்தம் செய்துதீரவேண்டிய நெருக்கடி தங்களுக்கு ஏற்பட்டுவிட்டதாக மத்திய அரசாங்க ஊழியர்களின் கழகங்கள் தெரிவித்தனவோ, அந்தக் காரணத்தை நிவர்த்தி செய்வதற்கான மார்க்கம்—அதாவது இரண்டாவது ஊதியக் குழுவின் அமைப்பு நிறைவேறிவிட்டது.

இந்த ஊதியக் குழுவிற்கு சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஜகன்னாததாஸ் அவர்கள் தலைவராகவும், திருவாளர்கள் வி. பி. காந்தி, என். கே. சித்தாந்தா, எம். எல். தந்த்வாலா, எல். பி. சிங், திருமதி மரகதம் சந்திரசேகரன் ஆகியோர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

அந்தக் குழுவினர், மத்திய அரசாங்க ஊழியர்களின் அடிப்படை ஊதிய நிலைமைகளையும், வேலை வசதிகளையும், பஞ்சப்படி முதலியவற்றையும் ஆராய்ந்து அறிந்து, அவற்றை எந்த அளவுக்கு மாற்றி அமைப்பது நல்லது என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று இந்தியப் பேரரசினர் கட்டளை இட்டிருக்கின்றார்கள்.

இந்தியப் பேரரசின் இந்த முடிவை நாம் மனமார வரவேற்கிறோம். மத்திய அரசாங்க ஊழியர்களுக்கும் இந்த ஏற்பாடு போதுமான அளவு மன நிறைவை அளித்திருக்கும் என்று கருதுகிறோம்.

குடும்ப வாழ்க்கையை நடத்துவதற்கு இன்றியமையாது தேவைப்படும் எந்தப் பண்டத்தை எடுத்துக் கொண்டாலும், அதன் விலை, இன்றைய தினம், பயங்கரமான அளவுக்கு உயர்ந்துவிட்டி

ருக்கிறது. கட்டையா, கரியா, எண்ணெயா, பருப்புவகைகளா, எந்தப் பண்டத்தை நினைத்துப் பார்த்தாலும் அதன் விலை உயர்ந்திருக்கிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது, அரிசி, சர்க்கரை, துணிவகைகள் ஆகியவற்றின் விலையும் சரி, மருந்துப் பொருள்களின் விலையும் சரி, உயர்ந்துதான் இருக்கிறது. வீட்டு வாடகையைப் பற்றியோ இயம்பவே வேண்டாம்—ஆண்டுக்கு ஆண்டு அது மேலே மேலே போய்க்கொண்டிருக்கிறதே தவிர கீழே இறங்கி வந்த கதையைக் காணோம். இந்த விலை உயர்வுகளால் ஏற்பட்டுவிட்ட பண நெருக்கடியை மேலும் அதிகமாக்கும் விதத்தில், இந்திய அரசாங்கத்தார், தபால் தந்தி கட்டணங்களையும், இரயில்வே கட்டணங்களையும், அடிக்கடி உயர்த்திக் கொண்டே வந்து, இன்றைய தினம் அவற்றை மிக உயர்ந்த இடத்தில் நிறுத்திவைத்திருக்கின்றனர். தேயிலை, காபி, சர்க்கரை, தீப்பெட்டி, முதலிய பல பண்டங்களுக்குப் புதிய வரிகளை விதித்து, அதன் விளைவாக அவற்றின் விலைகள் மேலும் சற்று கூடுதலாவதற்கு வழி வகுத்து விட்டனர் இந்திய ஆட்சியாளர்கள், போதாத குறைக்குப் பொன்னியம்மன் குறை என்பது போல, இத்தனைத் தொல்லைகளுக்கு இடையே தசாம்ச நாணய முறையும் நம் சமுதாயத்தினுள் நுழைந்து, தன்னால் இயன்ற அளவு விலைகளை உயர்த்தி வைத்துவிட்டது.

வாழ்க்கைச் செலவுகளெல்லாம் இப்படி மடமட வென்று உயர்ந்து கொண்டிருக்கும் போது, வருமானம் மட்டும் முன் நாள் இருந்த நிலையிலேயே எந்நாளும் சிரஞ்சீவியாக இருப்பது என்றால், அந்த நிலையை, நியாயமானது என்றோ, தாங்கிக் கொள்ளக் கூடியது என்றோ, நியாய உணர்ச்சி படைத்த யாரும் சொல்ல மாட்டார்கள்.

இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது, மத்திய அரசாங்கத்தின் மூன்றாம் பிரிவு—நான்காம் பிரிவு ஊழியர்கள், தங்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டு மென்று விரும்புவது முற்றிலும் நேர்மையான வேண்டுகோளே என்பது வெள்ளிடைமலையென விளங்கும். ஆகவேதான், அவர்களுடைய ஊதியத்தை உயர்த்துவதற்காக ஊதியக் குழுவை நியமித்துள்ள ஏற்பாடு சாலச் சிறந்தது என்பதை நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

மத்திய அரசாங்க ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்தத்தான் வேண்டும். உயர்த்துவதுதான் நியாயம்.

ஆனால், அவர்களுடைய ஊதியத்தை உயர்த்துகிற அதே நேரத்தில், அவர்களுடைய ஊதிய உயர்வுக் கோரிக்கையின் நேர்மையை

யும் தூய்மையையும் ஒப்புக்கொள்கிற அதே சமயத்தில், அவர்களை விட மிகக் குறைந்த ஊதியத்தில் பணியாற்றி வருகிற தமிழ் நாட்டு அரசாங்க ஊழியர்களையும், அதுபோலவே ஏனைய மாநிலங்களின் அரசாங்க ஊழியர்களையும் எவரும் மறந்துவிடல் ஆகாது.

ஒரே ஊரில் குடி இருந்துகொண்டு, ஒரே வகையான பணியைச் செய்துவரும் இரண்டு நண்பர்களில், ஒருவர் மத்திய அரசாங்க ஊழியராக இருந்தால், அவருக்கு அதிக ஊதியமும், மற்றொருவர் மாநில அரசாங்க ஊழியராக இருந்தால் அவருக்குக் குறைந்த ஊதியமும் இதுபோது தரப்பட்டு வருகிறது. எல். டி. சி. (Lower division clerk) என்று சொல்லப்படுகிறது கீழ்த்தர சிப்பந்தி, மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தவராக இருந்தால், அவருக்கு வேலையை ஏற்றுக் கொள்ளும் காலத்தில் (பஞ்சப்படியைச் சேர்த்து) கிட்டத்தட்ட 110 ரூபாய் மாத ஊதியமாகக் கிடைக்கிறது. ஆனால் அதே தோழர், அதே கீழ்த்தரச் சிப்பந்தி என்கிற நிலையில் மாநில அரசாங்க ஊழியராக இருப்பாரானால், அவருக்கு (பஞ்சப்படியைச் சேர்த்து) ஏறத்தாழ 85 ரூபாய்தான் கிடைக்கிறது.

ஒரே வகைத் தகுதி—ஒரே வகை வேலை—ஒரே வகைப் பதவி ஒரே ஊரில் குடியிருப்பு—என்றாலும் மத்திய அரசாங்க ஊழியருக்குக் கிடைப்பதைவிட மாநில அரசாங்க ஊழியருக்கு ஏறத்தாழ 25 ரூபாய் குறைந்த ஊதியம் என்றால், அதனை அளவுகடந்த அநீதி என்கிற பெயரால் தவிர வேறு எந்தப் பெயரால் அழைக்கமுடியும்?

மத்திய அரசாங்க ஊழியருக்குக் கிடைக்கும் ஊதியம் குறைவாக இருப்பதால் அந்த ஊழியரால் குடும்பச் செலவைச் சரிக்கட்ட இயலவில்லை என்பதை இந்தியாவின் முதலமைச்சர் பண்டித நேரு உட்பட அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

ஆனால் மாநில அரசாங்க ஊழியருக்குக் கிடைக்கும் ஊதியமோ, மத்திய அரசாங்க ஊழியரின் ஊதியத்தை விட மிகக் குறைவாக இருக்கிறது.

அந்த மிகக் குறைந்த ஊதியத்தை விட மேலும் குறைவாக இருக்கிறது ஆரம்ப ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகிற ஊதியம்.

மாதம் 115 ரூபாய்க்குக் குறையாமல் ஊதியம் பெறுகிற மத்திய அரசாங்க எல். டி. சி. ஊழியராலேயே குடும்பப் படகை வாழ்க்கைக் கடலில் வேதனை கலவாத நிலையில் ஓட்டிச் செல்ல முடியவில்லை என்றால், மாதம் சுமார் 75 ரூபாய் மட்டுமே பெற்று வருகிற செகண்டரி கிரேட் ஆரம்ப ஆசிரியரும், அதனினும் குறைவாகப்

பெற்று வருகிற ஹையர் கிரேட் ஆரம்ப ஆசிரியரும், எப்படித்தான் தங்களுடைய வாழ்க்கைப் பயணத்தை வசீகரமான முறையில் நடத்த இயலும்?

கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு ஆகிய முப்பெரும் பண்புகளிலிருந்து ஆரம்ப ஆசிரியர்கள் எந்தக் காலத்திலும் வழுவியது கிடையாது.

மிகக் குறைந்த ஊதியம்தான் அவர்களுக்குக் கிடைத்து வருகிறது—அந்த ஊதியத்தைக் கொண்டு குடும்பச் செலவைச் சரிக்கட்டுவது என்பது ஒருநாளும் இயலாத செயல்தான்—வேதனையும் வறுமையும் வாட்டமும் தொல்லையும்தான் அவர்களுடைய இணைபிரியாத நண்பர்களாக இருந்து வருகிறார்கள்—என்றாலும் அந்தக் காரணத்தால், அவர்கள், தங்களுடைய ஆசிரியப் பணியில் கவனக் குறைவாக இருந்தார்கள் என்றோ, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இளம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் கவலை அற்று வாழ்ந்தார்கள் என்றோ, பள்ளிக்கூட முன்னேற்றத்தில் முழு ஆர்வம் காட்டவில்லை என்றோ, நேர்மைத் திறம் படைத்த எவரும் இயம்பமாட்டார்கள்.

தங்களுடைய இல்லத்தில், இல்லாமை என்பது இல்லாத நேரமில்லை என்கிற நிலை இருந்துங்கூட, ஆரம்ப ஆசிரியர்கள், கண்ணெனத் தகும் எண்ணையும் எழுத்தையும் அன்றலர்ந்த செந்தாமரைகளென விளங்கும் இளங் குழந்தைகளின் நெஞ்சகத்தில் வேரூன்றச் செய்யும் உயரிய பணியில் முழு ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். தாங்கள்தான் வாழாவிட்டாலும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இளம் பிள்ளைகளின் எதிர்காலமாவது ஓங்கி உயர்ந்து வாழட்டும் என்கிற தியாக உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே எழுத்தறிவிக்கும் இன்சுவைப் பணியை ஆரம்ப ஆசிரியர் உலகம் ஆற்றி வந்திருக்கிறது.

நாட்டின் முன்னேற்றம் கல்வியின் முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறது என்பதையும், கல்வியின் முன்னேற்றம் ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறது என்பதையும், அறிஞர் உலகம் ஒப்புக்கொண்டு எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. என்றாலும், வேதனை - வேதனை—ஆரம்ப ஆசிரியர்களின் வாழ்க்கை நிலைமையும் ஊதிய நிலைமையும் இன்னமும் பரிதாபமான பள்ளத்தில்தான் வீழ்ந்து கிடக்கின்றன.

மத்திய அரசாங்க ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்தவேண்டியது அவசியம்தான். அதுபோலவே அவசியமானவைதான்—மாநில

அரசாங்க ஊழியர்களின் ஊதியத்தையும், ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியத்தையும் உயர்த்தும் பணிகள்.

மத்திய அரசாங்க ஊழியர் பிரச்சினையை மட்டுமல்ல, மாநில அரசாங்க ஊழியர் பிரச்சினை—ஆரம்ப ஆசிரியர் ஊதியப் பிரச்சினை—ஆகிய மூன்று பிரச்சினைகளையும் ஒரு சேரக் கவனித்து மூன்று சாராருக்குமே ஊதிய உயர்வை அளிப்பதற்கான சிபார்சுகளைத் தரும்படி ஊதியக் குழுவினருக்கு இந்திய அரசாங்கத்தார் ஆணை பிறப்பிக்கவேண்டும்.

அப்படிப் பிறப்பிப்பதுதான் அறநெறி ஆகும்.

மிக அருமையான படம்! ஆனால் மிகப் பெரிய குறை!

“**சுதந்தரப் பயணம்**” *என்கிற பெயர் படைத்த செய்திப் படம் ஒன்றை இந்திய அரசாங்க வானொலித் துறையினர் தயாரித்திருக்கிறார்கள்.*

அந்த நீண்ட திரைப்படம் சென்ற இரண்டு வாரங்களாக இந்தியா எங்கணுமுள்ள தியேட்டர்களில் காட்டப்பட்டு வருகிறது.

மொகலாயப் பேரரசர் ஜஹாங்கீர் டில்லியில் கொலு வீற்றிருந்த காலத்தில், ஆங்கில நாட்டுத் தூதுவர் ஒருவர் அந்த மன்னர் மன்னரிடம் வந்து, இந்த நாட்டில் தங்கள் நாட்டவர் வாணிபம் செய்வதற்கான அனுமதி அளிக்கவேண்டும் என்று மண்டியிட்டு வணங்கிக் கெஞ்சிக் கேட்கும் அந்தக் கட்டத்தில் படம் ஆரம்பமாகி படிப்படியாக வளர்ந்து, வெள்ளையர்களின் ஆதிக்கம் இந்தியா முழுவதிலும் பரவுவதை விளக்கி, அதற்குப் பின்னர், எப்படி எப்படியெல்லாம் இந்திய மக்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்துப் போர்க் கொடியை உயர்த்திப் புரட்சிக்குரல் எழுப்பி வீரப்போர் விளைத்தார்கள் என்பதை மிக அழகாக எடுத்துக்காட்டியிருக்கிறது.

குறிப்பாகவும் சிறப்பாகவும், 1857-ல், வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து, நானாசாகிப்—தாந்தியா தோப்பே—பகதூர்ஷா ஜான்சி ராணி முதலான மாபெரும் தலைவர்கள் நடத்திய அறப்போராட்டமும், அந்த வீரப்போரில் ஆயிரமாயிரம் மக்கள் தங்களைப் பெற்ற பொன்னாட்டின் விடுதலை வாழ்வுக்காகத் தங்கள் இன்னுயிரையும் ஈந்த காட்சியும் தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

அதுபோலவே, ஹ்யூம் என்கிற வெள்ளைக்கார நல்லறிஞரால் தொடங்கப்பட்ட காங்கிரஸ் கட்சி, படிப்படியாக வளர்ச்சியடைந்து பால கங்காதர திலகர் தலைமையிலும், பிறகு உத்தமர் காந்தியடிகள் தலைமையிலும் ஆற்றிய விடுதலைப் போராட்டங்களும், அவற்றின் பல்வேறு கட்டங்களும், பயனும் பண்பும் மிகுந்த முறையில், எழிலும் சுவையும் நிறைந்த வகையில், எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

காண்பவர்தம் கண்களை மட்டுமல்ல—கருத்தையும் கவரும் வகையில், வெறும் அழகுணர்ச்சியை மட்டுமல்ல—விடுதலை ஆர்வத்தையும் ஊட்டிடும் முறையில் படம் எடுக்கப்பட்டிருக்கிறது.

படம் மிகச் சிறந்த முறையில்தான் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே, மிகப் பெரிய குறைபாடு ஒன்றும் இருக்கிறது. அந்தக் குறைபாடு, தென்னிந்திய மக்கள் அனைவரின் உள்ளத்திலும் ஆறாத துயரத்தையும் மாறாத வேதனையையும் விளைவிப்பதாகவே இருக்கிறது.

1857–ல், வட இந்தியாவில் மூண்டெழுந்த சுதந்தரப் போராட்டத்தின் பகுதிகளை மிக விரிவாகக் காட்டியிருக்கிற அந்தச் செய்திப் படம், அந்தப் போராட்டம் தொடங்குவதற்கு மிகப் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே, தமிழகத்தில், மாவீரன் கட்டபொம்மனும், கேரள நாட்டில் அஞ்சா நெஞ்சன் வேலுத்தம்பியும், சிங்க ஏறுகளெனச் சீறியெழுந்து, பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரியைப் பிடித்துக் குலுக்கினார்களே அந்த அருமையான காட்சிகளைச் சிறிதளவு கூடக் காட்டவில்லை.

வேகமாக வேரூன்றி வந்த வெள்ளையர் ஆதிபத்யத்தை எதிர்த்து முதன் முதலில் புரட்சிக் கொடியை உயர்த்தி, அந்த அறப்போருக்காகத் தங்கள் ஆருயிரையும் தியாகம் செய்த மாவீரர்கள் ஆவார்கள் கட்டபொம்மனும் வேலுத்தம்பியும். ஆனால் அத்தகைய விடுதலை வீரர்களைத்தான் முற்றிலும் மறந்து விட்டிருக்கிறது இந்திய அரசாங்கத்தின் இந்தச் செய்திப் படம்.

அதுபோலவே, பின்னாளில் காங்கிரஸ் கட்சியின் தலைமையில் தொடங்கி நடத்தப்பட்ட பல்வேறு அறப்போர்களில், முன்னணி வீரர்களாகவும் தலைமைத் தளபதிகளாகவும் காட்சியளித்த வடநாட்டுத் தலைவர்கள் அத்தனைப் பேரும் படத்தில் காட்டப்படுகிறார்கள். ஆனால் அதே போராட்டங்களில், அந்த வட இந்தியத் தலைவர்களுக்குச் சிறிதளவும் சளைக்காத முறையில் ஈடுபட்டுப் பணியாற்றிய தென்னாட்டுத் தீரத் தலைவர்களில் ஒருவர்கூட அந்தப் படத்தில் காட்டப்படவில்லை.

தாதாபாய் நௌரோஜி—சுரேந்திரநாத் பானர்ஜி—பாலகங்காதர திலகர்—லாலா லஜபதிராய்—மோதிலால் நேரு—மௌலானா ஷௌகத் அலி முதலான வடநாட்டுத் தலைவர்கள் அத்தனைப்பேரும் காட்சி அளிக்கிறார்கள் படத்தில்.

ஆனால், காந்தியடிகள் அரசியலில் நுழைவதற்குப் பற்பல ஆண்டுகள் முன்னாலேயே விடுதலைப் போர்க்களத்தில் குதித்து, வெள்ளையருடைய வாணிபக் கொள்ளையை நிறுத்துவதற்காக, அவர்களுடைய கப்பல்களுக்கு எதிராகத் தன்னுடைய சொந்த முயற்சியில் கப்பல்களை ஓட்டிக் காட்டி, அப்படிச் செய்த காரணத்தால் இரட்டை ஜென்ம தண்டனை விதிக்கப்பட்டாரே கப்பல் ஓட்டிய தமிழர்—தியாகத் தலைவர்—வ. உ. சிதம்பரம்பிள்ளை—அவர் காட்டப்பட்டாரா படத்திலே என்றால், இல்லை!

பள்ளிக்கூடப் பிள்ளையாக இருந்த காலத்திலேயே விடுதலை ஆர்வம் கொண்டு, அப்படிக் கொண்ட காரணத்தால் பள்ளியிலிருந்து விலக்கப்பட்டு, நாடு முழுவதும் சுற்றிச் சுழன்று விடுதலை ஆர்வத்தை மூட்டி, பலமுறை சிறைக்கோட்டம் புகுந்து அதனைத் தவக்கோட்டமாக்கி, தென்னாட்டுத் திலகர் என்கிற பாராட்டுப் பெயர் பெற்று விளங்கிய டாக்டர் வரதராஜுலு நாயுடு உண்டா அந்தப் படத்திலே என்றால், கிடையாது.

தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனார், ஆந்திர கேசரி டி. பிரகாசம், முதல் இந்தியக் கவர்னர் ஜெனரல் சி. இராஜகோபாலாச்சாரியார், சேலம் வழக்கறிஞர் விஜயராகவ ஆச்சாரியார், பெரியார் ஈ. வெ. இராமசாமி, மயிலாப்பூர் எஸ். சீனிவாச அய்யங்கார், வ. வெ. சு. அய்யர் ஆகிய ஒவ்வொருவரும், ஒவ்வொரு வகையில்சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டு, வீரத் தொண்டு புரிந்திருப்பவர்கள் ஆவார்கள். இவர்களில் ஒருவர்கூட அந்தப் படத்தில் இடம் பெறவில்லை.

தமிழகம், கேரளம், கருநாடகம், ஆந்திரம் ஆகிய தென்னாட்டு மாநிலங்கள் நான்கிலும் மாபெருந் தலைவர்கள் பலர் தோன்றி விடுதலைப் போராட்டத்தின் முன்வரிசையில் இடம் பெற்று, பிரிட்டிஷ் வல்லரசை நடுங்க வைத்திருக்கின்றனர். என்றாலும் அவர்களில் ஒருவர்கூட, இந்தச் செய்திப்படம் எடுத்த மத்திய அரசாங்கத்தின் வானொலித் துறையினரின் கண்களில் படம் காணோம்.

ஏன் இந்த மாயம் என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

வட இந்திய வீரத் தலைவர்கள் அத்தனைப்பேரும் காட்டப்படுகிறபோது, தென்னிந்திய அறப்போர் அண்ணல்களில் ஒருவர்

கூட இடம் பெறாதது ஏன் என்பதைத்தான் நம்மால் விளங்கிக் கொள்ள இயலவில்லை.

இந்தியாவுக்கு விடுதலை வாழ்வு கிடைத்த பிறகுங்கூட, எல்லாத் துறைகளிலும் வடநாட்டு மாநிலங்கள்தான் முன்னேறிக் கொண்டு வருகின்றன என்றும், தென்னாட்டு மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டே வருகின்றன என்றும், தென்னாட்டு மக்களிடம் பரவலான ஒரு கருத்து ஆழமாகப் பதிந்திருக்கிறது.

அந்தக் கருத்தின் வன்மையை மேலும் அதிகப்படுத்துவதாகவே இருக்கிறது இந்தச் செய்திப்படம் என்பதை நம்மால் எடுத்துச் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

புதிய ஆபத்துகள் புறப்படுகின்றன!

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், இந்தியப் பேரரசினர், ஆட்சிமொழிக் குழு ஒன்றை அமைத்தார்கள்.

அரசாங்கத் துறையிலும், ஏனைய துறைகளிலும், இந்தி மொழியை, எந்த அளவு பரப்பலாம் என்பதையும், என்னென்ன முறைகளில் பரப்பலாம் என்பதையும் ஆராய்ந்து அறிந்து தெரிவிக்கும்படி இந்தக் குழுவினருக்கு அரசாங்கத்தார் கட்டளையிட்டிருந்தார்கள்.

சென்ற வாரத்தில், அந்தக் குழுவின் அறிக்கை, இந்தியப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

எந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் சரி, இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாத ஏனைய இந்திய மக்கள் அனைவருக்கும் அளவற்ற கவலையையும், எரிச்சலையும், கோபத்தையும் ஊட்டும் தன்மையதாகவே அமைந்திருக்கிறது குழுவின் அறிக்கை.

“இந்தியாவைப் போன்ற ஒரு பன்மொழி நாட்டில் ஒரு பாஷையை மத்திய சர்க்காரின் பாஷையாக அமுலுக்குக் கொண்டு வருவதில், சில அம்சங்கள் முக்கியமாக நினைவிருக்கவேண்டும். முதலாவது—தேசிய ஐக்கியத்துக்கு ஊறு விளையவிடாதிருப்பது. நிர்வாகம் மேலும் திறம்பட வகை செய்வது இன்னொன்று. சமுதாயத்தில் எல்லாப் பகுதிகளிடையும் அறிவு வளர்ச்சி ஏற்பட வசதி செய்வது மற்றொன்று. இறுதியாக எல்லா ஜனங்களுக்கும் எல்லாத் துறைகளிலும் சம வாய்ப்புக் கிடைக்கச் செய்வது .... இவ்வளவுக்கும் உலை வைக்கக் கூடியவாறே கமிஷனின் சிபார்சுகள் அமைந்திருக்கின்றன.”

என்று “சுதேசமித்திரன்” நாளிதழ், தன் தலையங்கக் கட்டுரையில் தெரிவித்திருப்பது முற்றிலும் உண்மை என்பதை யாரும் மறுக்கமுடியாது.

மத்திய அரசாங்கத்தின் ஆட்சிமொழியாகவும், மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்கட்குமிடையே செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்குரிய போக்குவரத்து மொழியாகவும் இந்தி இருக்கவேண்டும் என்றுதான் இந்திய அரசியல் திட்டம் முடிவு செய்திருக்கிறதே தவிர, ஏனைய துறைகளில் எல்லாம்கூட இந்தி மொழியே திணிக்கப்படவேண்டும் என்னும் கருத்து, அரசியல் திட்டத்தின் எந்தப் பகுதியிலும் காணப்படவில்லை.

அரசியல் திட்டம் தெரிவித்துள்ள அந்த இரு பணிகளுக்குக் கூட இந்தி மொழி தேவையில்லை என்பதே நம்முடைய கருத்து. அந்த இரு பணிகளுக்கும் ஏற்கனவே ஆங்கில மொழி பயன்பட்டு வருகிறது. அந்தப் பணிகளுக்குத் தேவையான நுட்பமும் தெளிவும் வளமும் திறமும் ஆங்கில மொழியில் ஏராளமான அளவுக்கு இருக்கின்றன. அந்த மொழியில் அந்தப் பணிகளை ஆற்றக்கூடிய பயிற்சியும் பக்குவமும் படைத்தவர்களும் இந்தியாவில் ஏராளமாக இருக்கிறார்கள். ஆங்கிலம் சர்வதேச மொழியாகவும் விளங்குகிறது. உலக மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளவும், நவீன விஞ்ஞான முன்னேற்றம் முதலானவற்றை அறிந்து தெளியவும் ஆங்கிலம் இன்றியமையாது தேவைப்படுகிறது. இவ்வளவு வசதிகள் நிரம்பிய ஆங்கிலத்தை விட்டுவிட்டு, மேற்குறிப்பிட்ட இரண்டு பணிகளுக்கும் புதிதாக இந்தி மொழியை ஏற்றுக்கொண்டு நாம் எதற்காக இடர்ப்பட வேண்டும்? அந்தப் பணிகளுக்கு ஆங்கிலம் கூடாது என்கிற கருத்துக்கு ஆதாரவாக இதுவரை காட்டப்பட்ட ஆதாரமெல்லாம், அது அந்நிய மொழியாக இருக்கிறது என்பதுதான். ஆனால் இந்த வாதம் சிறிதளவும் பொருத்தமற்றது ஆகும். ஆங்கிலம் அந்நிய மொழி என்றால், இந்தி பேசாத மக்களுக்கெல்லாம், இந்தி மட்டும் என்ன மொழி? நிர்வாக வசதி, பணச்செலவின்மை, புதிய முயற்சி தேவைப்படாமை, சர்வதேச அரங்கு ஆகிய எந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும், மத்திய அரசாங்க ஆட்சி மொழியாகவும் மாநில அரசுகளின் கடிதப் போக்குவரத்து மொழியாகவும் ஆங்கில மொழியைத் தொடர்ந்து வைத்துக் கொள்வதே சாலச் சிறந்த ஏற்பாடு என்பது வெள்ளிடைமலை.

ஆனால் இந்தி மொழிக் குழுவினரோ, பல படி மேலே சென்று, பொது வாழ்க்கையின் வேறு பல துறைகளில்கூட—எந்த நியாயத் படிப் பார்த்தாலும் தாய்மொழியே இருந்து தீரவேண்டிய துறை

களில்கூட—இந்தி மொழிக்கே இடம்தரவேண்டு மென்று சிபார்சு செய்திருக்கிறார்கள்.

ஒவ்வோர் மாநிலத்திலும் இருக்கிறதல்லவா ஒவ்வோர் ஹைகோர்ட்—அந்த உயர்நீதி மன்றங்களில், தீர்ப்புகள்—சம்மன்கள்—கட்டளைகள் முதலிய யாவும் இந்தி மொழியில்தான் இருந்தாகவேண்டும் என்பது, குழுவினர் அளித்துள்ள விபரீத யோசனைகளில் ஒன்று. இந்தி அல்லாத ஏனைய மொழிகளுக்கு இழைக்கப்படக்கூடிய கொடுமை இதைவிட வேறென்ன இருக்கமுடியும்?

"போர்வாள்" வார ஏடு, தன்னுடைய 17-8-57 இதழின் தலையங்கத்தில் தெரிவித்திருப்பதைப்போல, "ஒவ்வொரு மொழிவழி மாநிலத்தின் நீதிமன்றங்கள் அத்தனையிலேயும், அந்த மாநிலத்து மொழிதான் வழங்கப்படவேண்டும். அதுதான் நீதிக்கும், நேர்மைக்கும், தாய்மொழி வளர்ச்சிக்கும், இயற்கைப் பண்பாட்டுக்கும் ஒத்த முறை. எடுத்துக்காட்டாகத் தமிழ் நாட்டு நீதிமன்றங்கள் அத்தனையிலும் தமிழ்தான் வழக்கு மொழியாக இருக்கவேண்டும். அதுபோலவே கேரள நாட்டு அறமன்றங்களில் கேரள மொழியும், ஆந்திர நாட்டு நீதிமன்றங்களில் தெலுங்கு மொழியும் ஒளி வீசுதல் வேண்டும். அந்த உரிமையை அவற்றினிடமிருந்து பறித்தெடுத்து, இந்தி மொழிக்குத் தானமாக அளிப்பது, ஜனநாயக முறையும் அல்ல. அறநெறியும் ஆகாது."

டில்லிப் பாராளுமன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும் நிறைவேற்றப்படும் எல்லாச் சட்டங்களும், அந்தச் சட்டங்களின் கீழ்ப் பிறப்பிக்கப்படும் விதிகள் உத்தரவுகள் விளக்கங்கள் முதலியனவும் இந்தியிலேயே இருக்கவேண்டும் என்பது குழுவின் மற்றொரு சிபார்சு. இந்தச் சிபார்சுக்குள்ளே எத்தனைப் பெரிய அநீதி பொதிந்துகிடக்கிறது என்பதை நாம் விளக்கிக் கூறவேண்டிய அவசியமில்லை. இந்தச் சிபார்சு நடைமுறைக்கு வருமானால், தமிழ் நாட்டுச் சட்டமன்றத்திலிருந்து தமிழ் விரட்டியடிக்கப்படும். இந்தி மொழியே அங்குக் கொலுவீற்றிருக்கும். விவாதங்கள் யாவும் இந்தியிலேயே நடத்தப்படும். சொற்பொழிவுகள் எல்லாம் இந்தியிலேயே நிகழ்த்தப்படும். சட்டங்கள் அத்தனையும் இந்தியிலேயே தீட்டப்படும். தாங்கமுடியாத கொடுமை இது என்பதை யார் மறுக்க முடியும்?

இந்தி தெரிந்தவர்களுக்குத்தான் மத்திய அரசாங்கத்தில் உத்தியோகம் கொடுக்க வேண்டும். ஏற்கனவே அந்த உத்தியோகத்திலிருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அம்மொழியைக் கற்காவிட்டால் அவர்களைத் தண்டிக்கவேண்டும் என்பது குழுவின்

மற்றொரு சிபார்சு. இந்தி தெரியாத மாநில மக்களிடம் இந்தக் கருத்துரை ஆத்திரத்தை உண்டாக்கும் என்பதில் ஐயமென்ன!

மத்திய அரசாங்க அலுவல்களுக்கான பரீட்சைகள் இந்தி மொழியிலேயே நடத்தப்படவேண்டும் என்பது இந்திக் குழுவின் இன்னொரு கருத்து. இந்த ஆய்வுரை நடைமுறைக்கு வருமானால், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், இராஜஸ்தான் ஆகிய நான்கு மாநிலத்தவர்களுக்குத்தான் மத்திய அரசாங்க அலுவல்களில் மிகப் பல கிடைக்கும் என்பதும், ஏனைய மாநிலத்தவர்களுக்குக் கிடைக்கமாட்டா என்பதும், மறைக்க முடியாத உண்மைகள் அல்லவா?

தமிழ், தெலுங்கு, மலையாளம் முதலிய இந்திய மொழிகள் அத்தனையும், தத்தமக்கு என்று உள்ள எழுத்துக்களை விட்டு விட்டு, இந்தி மொழியின் எழுத்துக்கள் அமைந்துள்ள தேவநாகரி வடிவத்தையே தங்களுடைய எழுத்து வடிவமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது குழுவின் மற்றொரு விபரீத சிபார்சு.

"இந்தக் குழுவின் கருத்துரைகளை மத்திய அரசாங்கத்தார் அமுலுக்குக் கொண்டு வர முனைவார்களானால், அப்படி முயல்வது, இந்தி மொழியைப் பேசாத மக்கள்மீது இந்தி மொழியைத் திணிக்கும் செயலாகவே முடியும். அதனால் இந்தியப் பொது வாழ்க்கை முழுவதிலும் பெருங் குழப்பமே உண்டாகும்."

என்று, அந்தக் குழுவின் ஓர் உறுப்பினரும், பழம்பெருங் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமாகிய டாக்டர் சுப்பராயன் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். டாக்டர் அவர்களின் கருத்து, தென்னாட்டு மக்களின் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல அமைந்திருக்கிறது.

"இந்தி பேசாத மாநிலங்களின் தேவைகளை அறிவதிலோ, அவர்களுடைய எண்ணங்களுக்கு அநுதாபம் காட்டுவதிலோ குழுவினர் அக்கறை கொண்டதாகவே தெரியவில்லை"

என்று, அதே டாக்டர் அவர்கள் தெரிவித்திருப்பது முழு உண்மை என்பதை விளக்கும் முறையில்தான் குழுவின் சிபார்சுகள் அமைந்திருக்கின்றன.

குழுவின் சிபார்சுகள் அத்தனையையும் அச்சம் தயை தாட்சண்யமின்றி ஒதுக்கித்தள்ள வேண்டியதே இந்திய அரசாங்கத்தின் கடமையாகும்.

அந்த அரசாங்கம் அந்தக் கடமையை அவசியம் நிறைவேற்றும் என்று நம்புகிறோம்.

புது வாழ்வை அடைகிற பதினைந்தாவது நாடு!

171 ஆண்டுகளுக்குப் பிறகு, இவ்வாண்டு ஆகஸ்டு 31-ஆம் தேதியன்று மலேயா விடுதலை பெறப்போகிறது; யூனியன் (பிரிட்டிஷ்) கொடிக்குப் பதிலாக அன்று, மலேயா 'சமஷ்டி அரசின் 'பிறைக் கொடி' பறக்கும்.

பிரிட்டிஷ் நாட்டினிடமிருந்து சென்ற நூறு ஆண்டுகளில் பதினைந்து நாடுகள் சுதந்திரம் பெற்றிருக்கின்றன; இந்த வரிசையில் கடைசியாக வரும் நாடு மலேயாவேயாகும்!

மலேயாவிலுள்ள ஒன்பது சமஸ்தானங்களும் இரண்டு குடியிருப்புப் பகுதிகளும் சேர்ந்து 'சமஷ்டி அரசியல்' ஏற்படுகிறது.

பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள மலேயா நாடு 50,690 சதுர மைல்கள் பரப்புள்ளது.

இலங்கையைப் போல இருமடங்கு பரப்புள்ள இந்த நாட்டில் ஐந்தில் நான்கு பகுதிப் பிரதேசம் காடும் மலையும் நிறைந்தது. இரப்பரும், ஈயமும் நாட்டின் ஜீவாதாரச் செல்வங்கள்.

தென்னந் தோப்புகளும், நெல் வயல்களும், ஈயச் சுரங்கங்களும், இரப்பர் தோட்டங்களும் நிறைந்த இந்த நாடு, தென்கிழக்கு ஆசியாவிலேயே வளமுள்ளதாகும்.

1955-ம் ஆண்டுக் கணக்குப்படி நாட்டு மக்களின் எண்ணிக்கை மொத்தம் 60,58,317; மலேயர்கள்—29,67,233; சீனர்—22,86,883; இந்தியர்-7,13,810; பிற நாட்டினர்—90,391.

இரண்டாவது போர் முடிந்தது. ஜப்பானிய ஆதிக்கத்திலிருந்து நாடு மீண்டதும்; அரசியல் விழிப்பு ஏற்பட்டது. இடையூறுகள் பல ஏற்பட்டாலும் அரசியல் முன்னேற்றம் தடைப்படவில்லை. 1948-ல் சமஷ்டி நிர்வாகம் ஏற்பட்டது. நியமன அங்கத்தினர்களுள்ள சட்டசபை ஏற்பட்டது. 1951-ல் மந்திரி சபை நிர்வாகத்திற்கான பூர்வாங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இனத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் நிர்வாகப் பொறுப்பேற்றார்கள்.

சுயாட்சிப் பாதையில்........

1955-ல் புதியதோர் சமஷ்டி அரசியல் திட்டம் அமுலாயிற்று. இதனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபையும், சட்டசபைக்கு அடங்கிய மந்திரி சபை ஆட்சியும் தோன்றின. மக்கள் கூட்டுக் கட்சியின் தலைவரான தெங்கு அப்துல் ரஹ்மான் பிரதம மந்திரியாகப் பதவியேற்றார்.

தேசிய இயக்கம் வளர்ந்தது; நாடு சுயாட்சியும் சுதந்தரமும் பெறுவதுபற்றி மலேயாவிலுள்ள சிற்றரசர்களும், மலேயா சர்க்காரும், பிரிட்டிஷ் சர்க்காரும் கலந்தாலோசித்தனர். காமன்வெல்த்திற்குள் சுதந்தரமாக வாழும் உரிமை மலேயாவுக்குக் கிடைத்தது. புதிய அரசியல் திட்டம் உருவாயிற்று.

புதிய அரசியல் திட்டப்படி, மலேயா சிற்றரசர்கள், தங்களில் ஒருவரை நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுப்பர்; நாட்டின் தலைவர் (யாங் - தி - பெர்துவான் - அகாங்) ஐந்தாண்டுக் காலம் பதவியிலிருப்பார். மக்கள் பிரதிநிதி சபையில் செல்வாக்குள்ள ஒருவரை, நாட்டின் முதன் மந்திரியாகத் தலைவர் நியமிப்பார். முதல் மந்திரியின் ஆலோசனைக்கிணங்க மந்திரி சபை நிறுவப்படும். தலைவர், பொதுவாக மந்திரி சபையின் ஆலோசனைக்கிணங்கியே நிர்வாகத்தை நடத்துவார்.

பாராளும் மன்றத்தில் மேல் சபை (திவான் நெகாரா), மக்கள் சபை (திவான ரா அயாத்) என இரு சபைகளுண்டு.

மேல்சபையில் 38 உறுப்பினர்கள் இருப்பர்; இவர்களில் 22 பேர் மாநிலங்களால் (மாநிலத்திற்கு இருவர் வீதம்) தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். மற்றவர்கள் நியமன உறுப்பினர்கள்.

மக்கள் சபையில் 100 உறுப்பினர்கள் இருப்பர்; இவர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே! வயதுவந்த அனைவரும் தேர்தலில் கலந்துகொண்டு, மக்கள் சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பர்.

சுதந்தர தினத்திற்கு முன்பு— குடி உரிமையுள்ளவர்களுக்கும், அந்த நாளுக்குப் பிறகு நாட்டில் பிறப்பவர்களுக்கும் குடி உரிமையுண்டு. மலேயா சமஷ்டியிலுள்ள அனைவருக்கும் 'காமன்வெல்த் குடிமகன்' அந்தஸ்து உண்டு.

நீதி—நிர்வாகப் பிரிவுகள் தனித்து இயங்கவும், புதிய சமுதாயத்தில், மலேயர்களுக்கு உரிய பாதுகாப்புத் தரவும், மக்களின் ஜீவாதார உரிமைகளைக் காக்கவும் அரசியல் திட்டத்தில் தகுந்த ஏற்பாடு உண்டு.

சமுதாய முன்னேற்றம்

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் தோட்டத் தொழிலாளர்களும், வியாபாரிகளும், விஞ்ஞானிகளும், நிர்வாகிகளும் மலேயாவில் குடியேறினார்கள். அவர்களுடைய அறிவினாலும் உழைப்பினாலும் நாடு முன்னேறிற்று, நாட்டு மக்களுடன் கூடி உழைத்து, வாழ்க்கைத்தரத்தை உயர்த்தியதுடன், எல்லாரும் இன்புற்று வாழ வழிசெய்தார்கள். தென்கிழக்கு ஆசியாவில் வாழ்க்கைத் தரமும் சமுதாய முன்னேற்றமும் சிறப்பாகயிருப்பது மலேயாவில்தான். —"நம் நாடு"

பறித்த பூக்கள்

செல்வம் வைத்திருப்பவர்களின் செல்வம் எந்த அளவு வளர்கிறது? இது அல்ல! வறுமையால் வாடுபவர்களின் வறுமை எந்த அளவு குறைகிறது? இதுதான் நாம் முன்னேறுகிறோமா இல்லையா என்பதை விளக்கும் உரைகல்.

—பிராங்க்ளின் ரூஸ்வெல்ட்

அடடா! அரசியல் என்பது எவ்வளவு விலை உயர்ந்த பொருளாகிவிட்டது! வெற்றி பெறுவதற்கு மட்டுமா, தோல்வி அடைவதற்குக்கூட அல்லவா அங்கே ஏராளமான பணத்தைச் செலவிட வேண்டியிருக்கிறது!

—வில் ரோஜர்ஸ்

• உலகம் உன்னுடைய பகைவனல்ல. அது உன்னுடைய நண்பனுமல்ல. அது உன்னைக் கவனிப்பதே கிடையாது. அவ்வளவுதான்.

—ஜான் ஓம்ஸ்

ஒரு நாடு, தன் சுதந்தரத்தைவிட வாழ்க்கை வசதிகளையோ பணத்தையோ அதிகமாக மதிக்குமானால், அது, தன் சுதந்தரத்தையும் இழந்துவிடும். வாழ்க்கை வசதிகளையும், பணத்தையும் இழந்துவிடும்.

—சாமர்செட் மாம்

வாழ்வதற்காக உண். உண்பதற்காக வாழாதே.

—சிசரோ

நிழலின் அருமை, வெயிலில் வாடியவனுக்குத்தான் தெரியும். அதுபோல, ஓய்வின் இன்பம், கடுமையாக உழைத்தவனுக்குத்தான் புரியும்.

—ஆவ்பரி

மரணமா—வருகிறதா—வரட்டுமே—நான் தான் வாழ்ந்தாகிவிட்டதே! வாழாதவனுக்குத்தானே மரணத்தைப் பற்றி அச்சம்?

—பைரன்

அச்சம் கலவாத ஆனந்தமும் கிடையாது. நம்பிக்கை கலவாத பயமும் கிடையாது.

—பிரான்ஸிஸ் பேகன்

சென்ற இதழ் தொடர்ச்சி :—

தொடர் நாடகம் :

ஆளப் பிறந்தவன்

[தாமரைக் கண்ணன்]

நாடகத்தில் உள்ளவர்கள் :—

பிலிப்	...	மாஸிடோனிய மன்னன்
அரிஸ்டாட்டல்	...	பேராசிரியர்
அலெக்ஸாண்டர்	...	பிலிப்பின் மகன்
ஹெபேஸ்டியன்	...	அலெக்ஸாண்டரின் நண்பன்
ஸெல்யூகஸ் நிகேடர்	...	தளபதி
கிளீட்டஸ்	...	தளபதி
காய்னஸ்	...	தளபதி
டேரியஸ் III	...	பாரசீக வேந்தன்
பீஸஸ்	...	டேரியஸின் உறவினன்
அம்பி	...	தட்சசீல அரசன்
போரஸ்	..	ஜீலம் நதியை அடுத்த அரசன்

மற்றும் அமைச்சர்கள், வைத்தியன், வீரர்கள் முதலியோர்.

ஆளப் பிறந்தவன்

அலெக்ஸாண்டர்

காட்சி 23

கி. மு. மே' 323

எக்பட்டாணு நகரம்—பாரசீகம்—

[ஹெபேஸ்டியனுக்குக் காய்ச்சல் — படுக்கையில் உள்ளான். பக்கத்தில் ஸெல்யூகஸ், பெர்டிக்காஸ் வீரர்கள், வைத்தியன் முதலானோர்.]

ஹெபேஸ் :—(மெல்ல) அலெக்ஸாண்டர் பாலைவனத்தில் படையின் முக்கால் பாகத்தைப் பறிகொடுத்துவிட்டுப் பாரசீகம் வந்து சேர்ந்தார். அந்தக் கவலையேயில்லாமல் இந்த ஓராண்டுக் காலத்தில் படைகளைத் திருத்தி அமைத்தார். ஆயிரக்கணக்கான கிரேக்க வீரர்களுக்கும் பாரசீகப் பெண்களுக்கும் கலப்பு மணம் செய்து வைத்தார் (இருமல்)

ஸெல்யூ :—பேசாமலிருங்கள், நண்பரே! அதிகம் பேசக்கூடாது என்று வைத்தியர் சொல்லியிருக்கிறார்.

ஹெபேஸ் :—ஸெல்யூகஸ்! பெர்டிக்காஸ்!

பெர்டிக் :—தைரியமாயிருங்கள், தளபதி! உற்சாகமுள்ள மனம் பாதி நோயைப் போக்கிவிடும்.

ஹெபேஸ் :—அலெக்ஸாண்டர் என் நண்பர். ஆருயிர் நண்பர். அது ஒன்றே எனக்குப் போதும். (சிரித்து) மழலை மொழி பேசி தளர்நடை நடந்த காலம் முதல் இன்றுவரை அவர் என் நண்பர்.

ஸெல்யூ :—தாங்கள் காய்ச்சலால் படுத்தது முதல் அவர் சரியாகவே சாப்பிடுவதில்லை.

ஹெபேஸ் :—அவர்.........எங்கே?

[அலெக்ஸாண்டர் வருகிறான்.]

அலெக் :—இதோ வந்துவிட்டேன், ஹெபேஸ்டியன்!

ஹெபேஸ் :—மன்னவா!

அலெக் :—இனி, நீ என்னை அப்படி அழைக்காதே, நண்பா!

ஹெபேஸ் :—நண்பா!

அலெக் :—இல்லை. அலெக்ஸாண்டர்......!

ஹெபேஸ் :—அலெக்ஸாண்டர்!

அலெக் :—ஹெபேஸ்டியன்! ஹெபேஸ்டியன்!!

[கட்டித் தழுவிக்கொள்கிறான்.]

ஹெபேஸ் :—அலெக்ஸாண்டர்! அரிஸ்டாட்டலுடன் இயற்கை வளத்தை ரசித்தோம் — கல்வி பயின்றோம் — பெல்லாவின் அரண்மனை முற்றத்தில் தண்ணிலவொளியில் குளித்து மகிழ்ந்தோம் — கிரேக்கத்தின் வால்நட்சத்திரங்களாகப் பிரகாசித்தோம் — தன்னிகரில்லா வீரர்களாகப் பவனி வந்தோம் — அதெல்லாம்........

அலெக் :—மனத்திலிருந்து மறையமுடியாத நிகழ்ச்சிகள். மறக்கவில்லை, நான். நீங்காத அந்த இன்பக் காட்சிகள் நினைவில் தெளிந்து கொண்டுதான் இருக்கின்றன.

ஹெபேஸ் :—(கண்ணீருடன்) நான் மரணப்படுக்கையில் உள்ளேன்.

அலெக் :—நல்லவைகளை நினை, நண்பா. நலம் தரும்.

ஹெபேஸ் :—(இருமி) என் ஒரே ஒரு வேண்டுகோள்.

அலெக் :—சொல், தோழா! உடனே நிறைவேற்றுகிறேன். ஆனால், என் உயிர் ஹெபேஸ்டியன்! நான் இதற்குமேல் எங்கும் படையெடுக்கக் கூடாது என்று மட்டும் தடை போட்டுவிடாதே.

ஹெபேஸ் :—ஹூம். நான் சொல்ல நினைத்தது அதுதான். நீயே முந்திக்கொண்டாய். உன் நோக்கத்திற்கு நான் விலங்கு போட மாட்டேன், அலெக்ஸாண்டர். நீ புகழுடன் இருந்தால் போதும்.

அலெக் :—ஹெபேஸ்டியன்! நான் உன்னை நண்பனாக அடைந்ததற்குப் பெருமைப்படுகிறேன். நீ என்னைவிட மேலானவன்; நீ என்னைவிட நீண்ட நாட்கள் வாழவேண்டும். வாழ்ந்து, இதுவரை இருந்ததைப் போலவே என் இரு கண்களாக விளங்க வேண்டும்.

ஹெபேஸ் :—(விழிப்புடன்) அ...லெ...க்...ஸா...ண்...ட...ர்!

அலெக் :—என்ன? என்ன, ஹெபேஸ்டியன்!

ஹெபேஸ் :—பெர்டிக்காஸ்! ஸெல்யூகஸ்! மன்னரைப் பார்த்துக் கொள்ளுங்கள். அலெக்ஸாண்டர்! என் உயிர்த் தோழா! இப்படி வா...உன் வீரத்திருக்கரங்களைத் தா......வீரத்தின் உறைவிடமான உன் முகத்தைத் தாழ்த்து—அதில் என் அன்பு அதரங்களைக் குவித்து ஒரு...மு—த்—த—ம்.

[அலெக்ஸாண்டர் குனிகிறான். அவன் கரங்களைப் பற்றிக்கொண்டு முத்தம் இடுகிறான் தளபதி ஹெபேஸ்டியன். இருவர் முகங்களும் ஒன்றுகின்றன, அருகிலிருந்த அலங்கார விளக்கு அணைகிறது.]

அலெக் :—ஆ!

பெர்டிக் :—தளபதியாரே! தனபதியாரே!

அலெக் :—(இடிவிழுந்து) எழுப்பாதே, பெர்டிக்காஸ்! எழுந்திருக்க மாட்டார், அவர்! ஸெல்யூகஸ்! தளபதியின் நோயைக் குணப் படுத்தும் திறமையில்லாத வைத்தியனின் தலையைத் துண்டித்து விடும். —போ!

[படிப்படியாக அவன் மனம் பேதலிக்கிறது.]

ஹெபேஸ்டியன்! எனக்குக் கருத்துத் தெரிந்தது முதல் நீ என் நண்பன். இல்லை. நீ என் உயிர். நீதான் என்னை இயங்கவைத்தாய். (இருமல்) படுத்தால் இருவரும்—எழுந்தால் இருவரும். இன்பத்தில் - துன்பத்தில் இருவரும்! ஹெபேஸ்டியன்! இனி என்னால் எதையுமே சாதிக்க முடியாது. எதற்கும் அசையாத என் உள்ளம் அசைந்து விட்டது. அய்யோ! உண்ணும்போதும் உறங்கிடும்போதும் பாசறையைப் பார்த்திடும்போதும் உன் கவனம் வந்து என்னை வாட்டுமே. நீ போய்விட்டாய். இல்லை. என் உயிர் போய் விட்டது. (இருமல்) நீ நகராப்பிணம்—நான் நடைப்பிணம். நீ செத்துவிட்டாய். அப்போதே நானும் செத்துவிட்டேன்—நானும் செத்துவிட்டேன்! இருள் நிரம்பிய உலகம்—இருள் நிரம்பிய துன்ப உலகம்...!

[கட்டிலில் தலையை மோதிக்கொள்கிறான்.]

பெர்டிக் :—அரசே! அரசே!

அலெக் :—என்னைத் தடுக்காதீர்கள்! எனக்கு இந்த உலகமே தலைகீழாகச் சுற்றுகிறது.

ஸெல்யூ :—அரசே! இதோ திராட்சை ரசம்—இந்தாருங்கள். குடித்துவிட்டுக் கொஞ்சம் நிம்மதியாக இருங்கள்.

அலெக் :—ஆ! கள்...மயக்கம் தரும் கள்...கொடு, கொடு!

[மூன்று தடவை வாங்கிக் குடிக்கிறான்; மயங்குகிறான்.]

இன்னும் கொடு! ஸெல்யூகஸ்! நீயார்? பெர்டிக்காஸ் தானே? ஆஹா! இந்த உலகம் எவ்வளவு இன்பகரமானது—ஒளி நிரம்பியது தெரியுமா? உலகம் முழுதும் என் காலடியில் கிடக்கிறது......ஆகாயத்தை முட்டும் சிம்மாசனம்...வெண் கொற்றக் குடை...அதன் கீழ் நான் அமர்ந்திருக்கிறேன். என் கையில் இருப்பது செங்கோல்—ஆ! என் நா அசைகிறது. —இந்த நானிலமே ஆடுகிறது!

இப்போது, என்னைச்சுற்றி ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் பல நிற ஆடைகளுடன் நடனம் ஆடுகிறார்கள். அவர்களுடைய பூவைப் போன்ற மெல்லிய பாதங்கள் பூமியில் பாவவில்லை...அவர்கள் கழுத்தில் தென் பாண்டிக் கடல் முத்துச் சரங்கள்—கூந்தலில் மலைநாட்டு மயிலிறகு—செவி மணக்கும் வாசனைத் திரவியங்கள்—சிந்தை இனிக்கும் கண் கொள்ளாக் காட்சி! அனைவரும் மின்மினிப் பூச்சிகளைப்போல் கண் சிமிட்டி ஆடுகிறார்கள்—ஆனந்தமாக ஆடுகிறார்கள்!

ஓ! நான் அந்தரத்தில் மிதக்கிறேன். எல்லோரும் என் கூடவே மிதந்து மேலே வருகிறார்கள்! நாங்கள் சந்திரமண்டலத்தைத் தாண்டிவிட்டோம்! ஏ, சந்திரனே! என்னுடன் சண்டையிட உன்னால் முடியாது! நான் மாஸிடோனிய மன்னன் அலெக்ஸாண்டர்! ஏ, நட்சத்திரங்களே! என்னை ஜெயிக்க உங்களால் முடியாது! நான் வெற்றியின் நிலைக்களன் மகா அலெக்ஸாண்டர்!

[கட்டிலின்மீது விழுகிறான்.]

பெர்டிக் :—(தொட்டு) மகாராஜா! மகாராஜா!!

அலெக் :—(நிமிர்ந்து) ம்...ம்...நான் இங்கேயா இருக்கிறேன்! ஹ்...ஹ்...ஹெபேஸ்டியன்........!

[தளபதியின் முகத்தையே உற்று நோக்குகிறான். அவன் உள்ளம் நைகிறது; கண்களிலிருந்து நீர்வீழ்ச்சி — கட்டி அணைத்துக்கொள்கிறான், தனதாருயிர் நண்பனை !]

(திரை)

காட்சி 21

கி. மு. 323

பாபிலோன்

[வீரர்கள் ; மாமனும் மைத்துனனும்]

மாமன் :—காற்றாகப் பறந்து வந்தேன்—கடைசியில் தளபதியின் உடலை இந்தப் பாழும் கண்களால் கூடப் பார்க்க முடியவில்லை.

மைத்துனன் :—ராஜாதி ராஜாக்களெல்லாம் அசந்துட்டாங்க, மாமா ! அவ்வளவு சிறப்பா அடக்கம் செய்தோம்.

மாமன் :—மகாராஜா எப்படிடா இருக்காரு ?

மைத் :—போங்க மாமா ! இப்போ அதுதான் பெரிய கவலையா போச்சு. மகாராஜா, தளபதி போன அப்புறம் தண்ணி வெண்ணி இல்லாம கிடக்காரு. இருந்தாலும், அந்த போர்ப் பைத்தியம் மாத்திரம் போகல. யூப்ரடீஸ் டெல்டாவுக்குப் போய், அங்கே முக்கியமான துறைமுகங்களைக் கட்ட ஏற்பாடு செய்தாரு. அரேபிய நாடுகளின்மீது படையெடுக்கணும்னாரு. கப்பற்படையும் தயாராயிட்டுது.

மாமன் :—அவர் என்ன, மச்சான் ! அடிக்கடி அவரே சொல்லு வாரே—அந்தமாதிரி அவர் ஆளப்பிறந்தவரு. பாரேன் ! வயசு முப்பத்து மூணு ஆவுது. அரசனாக வந்து பதிமூனே வருஷம்—அதற்குள்ளே, ஆயிரக் கணக்கான மைல்கள் வரை போய் ஜெயிச்சாரு. எழுபது பெரிய நகரங்களைக் கட்டி, பதினெட்டு நகரங்களுக்கு அவருடைய பெயரையே வைச்சிட் டாரு ! பெரிய பெரிய திட்டங்களையே போட்டார்—பெரிய பெரிய விஷயங்களையே பேசினார்—பெரிய பெரிய காரியங் களையே சாதித்தார்.

மைத் :—இருந்தாலும், மாமா ! அவரைப் பற்றி ஜனங்களுக்கு வெறுப்புத்தான். இன்னைக்கி உலகத்தில அவருக்கு எப்படிப்

பட்ட பேரு தெரியுமா ? கொலைகாரன்—கொள்ளைக்காரன்—கொடிய நெஞ்சம் கொண்டவன்—சர்வாதிகாரி—பஞ்சமா பாதகன்—அக்கிரமக்காரன் என்பதுதான் ? கண் எதிர இப்பவே இப்படி, இன்னும் நூறு வருஷம் ஆயிரம் வருஷம் போனா எப்படி பேசுவாங்க......

மாமன் :—டேய்—டேய், நிறுத்துடா ! அவர் சர்வாதிகாரமா நடந் தாரு, அட்டூழியம் செய்தாரு. உண்மைதான். ஒத்துக்கறேன். ஆனா, உன் கண்ணுக்கு நல்லது எதுவும் படாதா ? கொஞ்ச நேரம் சிந்தித்துப் பாரு. அவரிடம் கெட்டதைவிட பெரிய பெரிய அறிஞர்களுக்கே இல்லாத நல்ல குணங்களும், பெரிய பெரிய வீரர்களிடமே இல்லாத ஈவு இரக்க சிந்தனையும் இருந் தது என்பது தெரியும். அவருடைய ஆண்மையும் வீரமும் தன்னம்பிக்கையும் உனக்கு வழிகாட்டியாக விளங்குதே. அது உனக்குப் புரியல ?

கவிஞனுடைய வீட்டுக்கு மதிப்பு கொடுத்தாரு- பகை வனின் பரிதாப சாவுக்குக் கதறி கண்ணீர் விட்டாரு—செய்த தவறுக்காக வருந்தி தற்கொலைக்கு முயற்சித்தாரு—சாதாரண போர்வீரனைத் தன்னுடன் ஒப்பிட்டு, தனக்கு மட்டும் சுயநல வாழ்வு வேண்டாம் என்றாரு ! இந்த மாதிரி கள்ளமில்லா குழந்தை குணங்களை இதுவரை யாரும் பார்த்திருக்க மாட் டாங்கடா—அதிலும், ஒரு மாபெரும் அரசன் கிட்ட எதிர் பார்க்க முடியாது !

அலெக்ஸாண்டர் முழு மனசோடு செய்த ஒரே ஒரு நல்ல செய்கையை நினைச்சா கூட போதும் ; அவர் செய்த கொடுமை பூராவையும் மறந்துடத் தோணும். அதையெல்லாம் விட்டுட் டான்......!

மைத் :—அட, என்ன இருந்து என்ன மாமா பயன் ? அதுங் கூடவே ' சாவு 'ன்னு ஒண்ணு இருக்கே.

மாமன் :—சாவுக்கும் இதுக்கும் என்னடா சம்பந்தம் ?

மைத் :—அப்போது மகாராஜா பொழைச்சுக்குவாருன்னு சொல் றீங்களா ?

மாமன் :—என்னடா சொல்றே ? அவர் உடம்புக்கு என்ன ?

மைத் :—சரிதான் ! இதுவரைக்கும் விஷயம் தெரியாமதான் பேசி கிட்டிருந்தீங்களா ? தோ—பார், மாமா ! அவரு யூப்ரடீஸ் நதி யிலிருந்து திரும்பி வந்தாரு பாருங்க, வழியிலேயே ஆரம்பிச்

சுடுத்து; அப்போ இருந்து ஒரே விஷ ஜுரம்—நம்ம தளபதிக்கு இருந்ததே அதைப் போல!

மாமன் :—(பதட்டத்துடன்) ரொம்பவும் காய்ச்சலா?

மைத் :—அதிகம்தான். பத்துநாளா அடிக்குது. அதுவுங்கூட ஜுரம் வந்ததிலிருந்து ஓயாம குடிச்சாரு. தளபதி போயிட்டாரேன்னு ஏக்கம் வேறே. படுக்கையை விட்டு எழுந்திருந்தே மூணு நாளாச்சு. மாமா, பேச்சு மூச்சே இல்ல—வாயை அடைச்சுடுத்தாம்.

மாமன் :—இப்போ எங்கே இருக்காரு?

மைத் :—அமுராபியின் பழைய அரண்மனையில் வைச்சிருக்காங்க—.

மாமன் :—ஊருக்குப் போனாலும் போனே(ன்). ஒரு விஷயமும் தெரியாமபோயிட்டுது பாத்தியா?

மைத் :—இன்னைக்கு வீரர்களெல்லாம் பார்க்கிறதுக்கு உள்ளே விடறாங்களாம்; வாங்க போவோம்.

மாமன் :—ஆமாம்—ஆமாம். வா, சீக்கிரமா போவோம்.

(திரை)

காட்சி 25

28, ஜூன் 323

பாபிலோன்

அமுராபியின் அரண்மனை

[மரணப் படுக்கையில் அலெக்ஸாண்டர்—முயன்று பேசுகிறான். இடையிடையே இருமல், பெருமூச்சு, இழுப்பு எல்லாம். ஸெல்யூகஸ், பெர்டிக்காஸ், வீரர்கள் ஆகியோர்.]

அலெக் :—இந்த உலகத்தில் நான் தன்னந் தனியனாக விடப் பட்டேன்; எனக்குத் துணையாக ஒருவர்கூட இல்லை.

பெர்டிக் :—நாங்கள் இருக்கிறோம், அரசே!

ஸெல்யூ :—தங்களுக்காக இந்த நாடே இருக்கிறது, மகாராஜா!

அலெக் :—'இலியத்' காவியம் எங்கே, எடுங்கள்.

[ஸெல்யூகஸ் எடுத்துக் கொடுக்க அதை அணைத்துக் கொள்கிறான்.]

என் உயிர் நண்பர்கள் ஒவ்வொருவராக இறந்துவிட்டார்கள். ஹெபேஸ்டியன் என்று இறந்தானோ அன்றே என்னுடைய பாதி பலம் போய்விட்டது; அன்றே பாதி அலெக்ஸாண்டர் இறந்துவிட்டான்.

ஸெல்யூ :—(பேச்சை மாற்றி) தங்களுக்கு உடல் நலமானால் போதும். உடனே அரேபியாமீது படையெடுத்துவிடலாம்.

அலெக் :—(வெறியுணர்ச்சி) ஆமாம். 'போர்—போர்' என்பதே எனது இலட்சியம். அந்த இலட்சியத்தை விரைவில் நிறைவேற்றவேண்டும். நான் பெரிய வீரன்...இந்த வையகத்திலேயே எனக்கு யாரும் எதிரில்லை! நான் உலகம் முழுவதையும் ஆளப்பிறந்தவன்!

[எழுந்திருக்க முயன்று கீழே விழுகிறான்; அருகில் இருப்போர் பதறி, உதவுகின்றனர்.]

ஆ! என்னால் எழுந்திருக்க முடியவில்லை. நெஞ்செல்லாம் வலிக்கிறது. கண்கள் சுற்றுகின்றன. கால்கள்......உடலில் இரத்த ஓட்டமே இல்லையா? அய்யோ, கடவுளே! நான் ஏதாவது மன்னிக்க முடியாத குற்றம் செய்துவிட்டேனா? அறிஞர்களின் சொல்லைத் தட்டிக் கழித்தேனா? அவர் தம் அறிவுரைகளை மீறிவிட்டேனா?

—அரிஸ்டாட்டல் குரல், எதிரொலி—

"ஆட்சிப் பீடத்தில் உள்ளவன் விடும் ஒவ்வொரு மூச்சிலும், தான் மக்களில் ஒருவன்—மக்களுக்காகக் கடமைப்பட்டவன் என்ற பேருண்மை வெளியாக வேண்டும். இல்லையென்றால், அவன் பேராசை பிடித்த சர்வாதிகாரியாக மாறிவிடுவான். அப்போது, அவன் கற்ற இராஜ தந்திரங்கள் அவனுக்குப் பயன்படாமல் போய்விடும். 'போர்—போர்' என்று புலம்புவான். மனிதன், என்று தன்னைத்தானே மறந்து ஆணவத்தால் கர்வமடைகிறானோ அன்றே அவன் வாழ்க்கையில் இருள் சூழ ஆரம்பித்துவிடும். அஸ்தமிக்கும் அவன் வாழ்வில் மறுபடியும் உதயசூரியனை எதிர்பார்க்கவே முடியாது. அவன் வாழ்வும் வளமும் பட்டது பட்டதுதான்!"

அலெக் :—யாரோ பேசுகிறார்கள்—எங்கிருந்தோ பேசுகிறார்கள் ; பேசி என்னைப் பயமுறுத்துகிறார்கள். நான் அஞ்சாநெஞ்சம் படைத்தவன்! என்னை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது கையில் வாள் எடுத்தால் வையத்தையும் வானத்தையும் தூள் தூளாக்கி விடுவேன் ! நான் பெரிய வீரன் !!

—மீண்டும் நினைவுச் சுழல்—

" தன்னெடுப்பு ஊக்கம் தற்பெருமையாக மாறக்கூடாது; தன்னம்பிக்கை ஆணவம்பிடித்த செர்வமாக ஆகக்கூடாது."

அலெக் :—எனக்கிருப்பது ஆணவமல்ல—கர்வமல்ல ! எனக்கு இருப்பது ஒரே ஒரு நோக்கம்—எனக்கு இருப்பது ஒரே ஒரு இலட்சியம்... ' நான் இணையில்லா வீரன் ' என்பதை நிலைநாட்டுவது. எனது மகத்தான சாதனை, ' இம்மண்ணுலகையே ஆளப்பிறந்தவன் நான் ' என்பதை நிரூபிப்பது. இதுதான் எனது இலட்சியம்—எனது நோக்கம்—நான் அதை நிச்சயம் நிறைவேற்றிவிடுவேன் !

—கிளீட்டஸின் குரல்—

" மனிதனுக்குத் தான் கொண்ட கொள்கையின்மீது அசைக்க முடியாத பற்று—நிறைந்த ஆர்வம்—அதை நிறைவேற்றத் தளரா முயற்சி—இவை இருக்கத்தான் வேண்டும். ஆனால், வெறியாக மாறிவிட்டால் நிலைமை தலைகீழாகி நிலை தடுமாறிவிடும். நினைவு படுத்திக் கொள்ளுங்கள் !"

அலெக் :—(வெறியுடன்) மாட்டேன் ! நினைவு படுத்திக்கொள்ள மாட்டேன். எனது உன்னத இலட்சியம் நிறைவேற எனக்கு வெறிபிடித்தாலும் பரவாயில்லை. நான் எப்படியும் உலகம் முழுவதையும் வெல்லவேண்டும். .....ம் ....செல்யூகஸ் ! உடலெல்லாம் ஒரே தளர்ச்சி. ஆகாயத்தில் மிதப்பதைப் போன்ற உணர்ச்சி ! அய்யோ ! என்னால் உட்காரவும் முடியவில்லை—படுக்கவும் முடியவில்லையே. கடவுளே ! உன்னுடைய திருக்குமாரன் நான் என்று பூசாரிகள் கூறினார்களே—அது உண்மையாக இருந்தால் எனக்கேன் இந்த அவலநிலை...... அய்யோ !...ம்...யாராவது எனக்குக் கொஞ்சம் மதுவைக் கொடுங்கள் !

—போரஸின் குரலும்—அலெக்ஸாண்டர் குரலும்—

" மது ! கல்லைப்போன்ற உடலையும் கரைத்துவிடும். உரம்மிகுந்த உடலையும் உருக்குலைத்துவிடும் "

" இருக்கலாம். ஆனால், எனக்கு இருப்பது இரும்பைப் போன்ற இதயம். அது கரையாது."

அலெக் :—ஆமாம். உண்மை—உண்மை. என் இதயம் அசையாது—கரையாது—கலங்காது.

[தள்ளாடுகிறான்—திடீரென்று]

பெர்டிக்காஸ் ! செல்யூகஸ் நிகேடர் ! நமது படை இப்போதே புறப்படட்டும். நான் உயிரோடு இருக்கும் வரை வீர வாழ்வுதான் வாழவேண்டும் ! இறப்பதாக இருந்தால் போர்க்களத்தில் இறந்து விடுகிறேன். எனது இலட்சியம் போர்... வெற்றி...புகழ்...புகழ்...போர்...போர்...!

—அரிஸ்டாட்டலின் குரல்—

" எதற்கும் ஓர் எல்லை விதித்துக்கொள். எதிலும் அளவு கடந்த வெறியிருக்கக்கூடாது ; அளவு கடந்த வெறியிருக்கக் கூடாது ! குறிக்கோளில் வெறிகொண்டு அலையக்கூடாது ; வெறிகொண்டு அலையக்கூடாது ! வெறிகொண்டு அலையக் கூடாது "

அலெக் :—பொய் ! அவையெல்லாம் பொய் ! அது வெறும் பேச்சு—ஒன்றும் செய்யமுடியாத கோழைகளின் வெட்டிப் பேச்சு ! இந்த ஒரு விஷயத்தில் மட்டும் நான் யாருடைய உபதேசத்தையும் கேட்கமாட்டேன். கேட்கவே மாட்டேன் ! என் இஷ்டப்படிதான் செய்வேன்—நான் மகாவீரன்—நான் எதையும் செய்வேன்—என் விருப்பப்படிதான் செய்வேன் .. ஆ...ங்...யார் அது ? இப்படி வா—என்னைப் பிடி...பிடி...

பெர்டிக் :—மகாராஜா ! மகாராஜா !!

செல்யூ :—என்ன செய்கிறது, மகாராஜா ! வைத்தியரே ! வைத்தியரே !

சேரன் :—வைத்தியர்களெல்லாம் மயக்கமடைந்து கிடக்கிறாங்க !

அலெக் :—அய்யோ ! இங்கே யாரையும் காணோமே—எங்கே போய்விட்டார்கள் ? நான் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறேன்......யாருடனோ சந்தோஷமாகப் போய்க்கொண்டிருக்கிறேன்.

பெர்டிக் :—தங்களுக்குப் பிறகு இந்த அகண்ட சாம்ராஜ்யம்......

அலெக் :—என்னைப் போன்ற சிறந்த பலசாலிக்குச் சொந்தம்...! பெரிய வீரனுக்குச் சொந்தம் ! (கண்கள் சுழலுகின்றன.)

பெர்டிக் :—மன்னவா! மன்னவா !!

அலெக் :—வாழ்வு...என்—வாழ்வு...வானவில்...மின்னற் பிழம்பு! உலக சிம்மாசனம்...வெண் கொற்றக்குடை...நான் அமர்ந்திருக்கிறேன்...அரசனாக..என் நா அசைகிறது...நானிலமே ஆடுகிறது......அந்தரத்தில்.......மிதக்கிறேன்......சுற்றிலும் ஆயிரக்கணக்கானவர் கவரி வீச...பன்னீர் தெளிக்க...நடனம் ஆடுகின்றனர்! ஆஹா! கண்கொள்ளாக் காட்சி! நாங்கள் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறோம்...கிரேக்க மண்டலமே ...நீ வாழி...!

செல்யூ :—மகாராஜா! மகாராஜா !!

அலெக் :—நான் வரமாட்டேன்—உங்களுடன் வரமாட்டேன்... நான் இந்த உலகத்தை அடக்கப் பிறந்தவன்...அடக்கி ஆளப் பிறந்தவன்—ஆளப்...பி..றந்...த...வ...ன்...!

[ஆளப்பிறந்தவன் அணைத்துக்கொண்டிருந்த 'இலியத்' மாகாவியம் நழுவிக் கீழே விழுகிறது.]

(முற்றும்)

அறிவுக் கதிர்

உழைப்புக்கு அயராதே—அதுவே வாழ்க்கையின் வெற்றி; சிந்தனைக்குச் சலியாதே—அதுவே வாழ்வின் சக்தி; அன்பு காட்ட அயராதே—அதுவே வாழ்வின் இன்பம்; கற்பதற்கு மறவாதே—அதுவே வாழ்வின் அழகு; பிரார்த்தனையைக் கைவிடாதே—அதுவே ஆன்மாவின் ஆற்றல்.

—டாரோ

பிரார்த்தனை ஒருவித அகில உலக சமயமாகும்.

—விவேகானந்தா

பிறர் வாழ்வுக்கு வெளிச்சம் காட்டுபவர்கள் தங்கள் வாழ்க்கையையும் வெளிச்சப்படுத்தாமல் இருக்க முடியாது.

—மாபரி

வாழ்வாகிய மலருக்கு அன்பே தேன்; அன்பின் சக்தியினாலேயே ஒரு மனிதனின் முன்னேற்றத்தை அளவிட முடியும்.

—சிவானந்தா

செல்வத்தை அளிக்கும் சிறந்த பொருள்

[தொண்டைமான்]

நமது முன்னோர்—சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்களின் வழிவழி—வந்தோர் மிகப் பெரிய கோட்டை கொத்தளங்களை எழுப்பியிருக்கிறார்கள். பிரம்மாண்டமான கட்டிடங்களைக் கட்டியிருக்கிறார்கள். வான் முட்டும் கோபுரங்களை, மாட மாளிகைகளை, வனப்பு மிக்க அரண்மனைகளை ஆலயங்களை அமைத்திருக்கிறார்கள்.

அழிந்தும், அழியாமலும், அழியக்கூடிய நிலைமையிலும் அல்லது அழியக் கூடாத தன்மையிலும் அமைந்திருக்கும் அந்தக் கோட்டை கொத்தளங்களின், கூட கோபுரங்களின் அழகு ஒருபுறமிருக்கட்டும். அவற்றின் அமைப்பு முறையும், அங்குள்ள சிற்ப, சித்திர வேலைப்பாடுகளின் சிறப்பும் சீரும் ஒருபுறமிருக்கட்டும்.

சிந்து சமவெளியில் நமது முன்னோர்—திராவிடர்—வாழ்ந்த போது கட்டிய அந்தக் கட்டிடங்கள்-இன்று 7000 ஆண்டுகளுக்கு முன்பு, நாகரிகமான முறையில் நல்ல பல கட்டிடங்களைக் கட்டி நகர் அமைத்து நாடாண்ட திராவிடர்கள் கட்டிய அந்தக் கட்டிடங்கள்—எப்படிக் கட்டப்பட்டன என்று சென்று பாருங்கள். அகழ்ந்தெடுக்கப்பட்ட அரப்பா, மொகஞ்சதரோ நகர்களைப் பற்றிய ஆராய்ச்சிகளைப் படித்துப் பாருங்கள்!

மதுரையில் சங்கம் வைத்து மொழி வளர்த்த பாண்டிய மன்னர்களின் பரம்பரையார் கட்டிய அந்தக் கட்டிடங்களையும், வஞ்சி நகரிலிருந்து சேர நாட்டை ஆண்டு, இமயத்தில் கொடி பொறித்த சேரன் செங்குட்டுவன் சந்ததியார் சிறப்பாகக் கட்டிய அந்தக் கட்டிடங்களையும், தஞ்சையிலும், உறையூரிலும் தலைநகரை வைத்துக் கொண்டு தீரத்தோடு ஆட்சி செய்த சோழ மன்னர்கள் மிகப் பெரிய அளவில் எழுப்பிய அந்தக் கட்டிடங்களையும் ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்! சங்கத் தமிழ் நூல்களில் இவற்றைப் பற்றிப் படித்துப் பாருங்கள்!

பல பல நூற்றாண்டுகளைக் கடந்தும், பல்லாயிரம் ஆண்டுகள் ஓடியும் அவற்றில் சில இன்றும் உள்ளன—அல்லது அவற்றின் சின்னங்கள் இருக்கின்றன.

சிந்து வெளியில் உள்ள, 7000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடங்களும் **செங்கலும் சுண்ணாம்பும்** கலந்தே கட்டப்பட்டுள்ளன! தென்னாட்டின் பழம் பெருங் கட்டிடங்கள் எல்லாம் செங்கல் சுண்ணாம்பு இவற்றைக் கொண்டே கட்டப்பட்டிருக்கின்றன! சங்ககால

இலக்கியங்கள் — புறநானூறு, பத்துப்பாட்டு, தொகை நூல்கள் முதலிய நூல்களும் இப்படித்தான் கூறுகின்றன!

ஏன், எதற்காக, எவ்வளவு அழகாக, இவற்றைத் தமிழன் நிர்மாணித்தான் என்பதைவிட, எவ்வளவு வலிவுடன், எப்படிக் கட்டினான் என்பதைக் கவனியுங்கள். தங்கத்தால், வெள்ளியால், ஈயத்தால் அல்லது வைரத்தால் கோட்டை கட்டி வாழ்ந்தார்கள் என்று நாம் சொல்லவில்லை— தமிழன் மண்ணில், மண்ணைக் கொண்டு, மண்ணினால்தான் கோட்டை கட்டினான் — கூட கோபுரங்கள் அமைத்தான்,

களிமண்ணை அறுத்துச் சூளையில் இட்டு **செங்கல்** தயாரித்தார்கள். சுண்ணாம்புக் கல்லைக் காளவாயில் போட்டு **சுண்ணாம்புச் சாந்து** தயாரித்தார்கள். செங்கல்களுக்கிடையே, சுண்ணாம்புச் சாந்தை இட்டு, சுவர்கள் எழுப்பினர்—கோட்டைகள் அமைத்தனர், அந்தக் கோட்டைகளை அழிக்க அன்னியரால் முடியவில்லை. அவ்வளவு வலிவு பெற்றன!

உண்மையிலேயே சுண்ணாம்பு **சக்தியும், சத்தும்** உள்ள பொருள்! கட்டிடங்களுக்கேற்ற கெட்டியான பொருள். அதன் உயர்வை உபயோகத்தை உணர்ந்துகொண்டார்கள். அதைக்கொண்டே கட்டிடம் கட்டினார்கள். அதனால் அவை நீண்ட காலம் நிலைத்தன— நிலைத்துமிருக்கின்றன!

காலந்தான் ஓடிவிட்டது. ஆனால் செங்கல், சுண்ணாம்பு இவற்றின் சிறப்பும், பயனும் ஓடிவிடவில்லை; தினமும் அவற்றின் உபயோகம் வளர்ந்தபடியே உள்ளது!

சுண்ணாம்பு கலக்காத வீடுகளோ, கட்டிடங்களோ தொழிற்சாலைகளோ, அணைகளோ, மற்றவையோ இல்லையென்று நிச்சயமாகக் கூறலாம்! 'சுண்ணாம்பு இல்லாத இடமே இல்லை' என்று கூடச் சொல்லலாம்!

திராவிடத்தின் எல்லாப் பகுதிகளிலும், **சுண்ணாம்பு மண்** ஆங்காங்கு காணப்படுகிறது-அதைப் பார்க்கிறோம்! அருகருகே **ஜிப்சம்** உப்பு கலந்த மண்ணும் இருக்கிறது—அதன்மேல் நடந்து செல்கிறோம். இடை இடையே எங்கு பார்த்தாலும் **களிமண்** கிடக்கிறது. அதையும் காண்கிறோம். அதே சமயத்தில் தொழிற்சாலையில் தயாராகிவரும் **சிமெண்ட்**டையும் பார்க்கிறோம்! இது எப்படிச் செய்யப்படுகிறதோ என்று ஆச்சரியப்படுகிறோம்!

அதுமட்டுமல்ல. சுண்ணாம்பு கொண்டு கட்டப்படும் கட்டிடங்களை ஓர் புறம் பார்க்கிறோம். மறு புறத்திலே **சிமிட்டி** கொண்டு கட்டப்படும் கட்டிடங்களையும் பார்க்கிறோம். சுண்ணாம்பை விடச் சிமிட்டி நல்லது என்று கூடச் சொல்லிக் கொள்கிறோம்!

உண்மையில், **சுண்ணாம்பு மண்ணோடு, ஜிப்சம், களிமண்**—இவற்றின் **கலவையே** சிமிட்டி! வேறு ஒன்றும் அல்ல! சிமிட்டி உயர்ந்தது என்று சொன்னால், அதன் முதல் சிறப்பு சுண்ணாம்புக் கல்லுக்குத்தான்!

சிமிட்டி தயாரிக்க சுண்ணாம்பு மிக மிக இன்றியமையாதது. சுண்ணாம்பின் தன்மையை சிலர் ஆராய்ச்சி செய்து வந்தார்கள். அதில் ஒருவர்தான் **ஜோசப் ஆப்டின்** (Joseph Aspdin)! அவர் இந்த மூன்று மூலப் பொருள்களையும் கலந்து சிமிட்டி தயாரிக்கலாம் என்று சொன்னார். செய்து பார்த்தார்கள். வெற்றி கிட்டியது. சிமிட்டியும் உலகெங்கும் பரவத் தொடங்கிற்று!

செய்யும் விதம்!

பெரிய பெரிய முதலாளிகள், பெரிய பெரிய இயந்திரங்களைப் பெரியதோர் தொழிற்சாலையில் அமைத்து சிமிட்டி தயாரிக்கிறார்கள்—விற்கிறார்கள் — கொள்ளை லாபம் அடிக்கிறார்கள்!

சுண்ணாம்புக்கல், ஜிப்சம், களிமண் முதலியவற்றை வெட்டி எடுக்கிறார்கள்! தொழிற்சாலைக்குக் கொண்டுவந்து, சுற்றும் பெரிய இயந்திரங்களில் போட்டு 1200 முதல் 1500 டிகிரி (F) வெப்பத்தில் இடித்துத் தூளாக்குகிறார்கள். மூலப் பொருள்கள் முறையே இயந்திரங்களின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று, ஒவ்வொரு ரசாயன மாறுதலை அடைந்துவிடுகின்றன. தூளாக்கும் பொறி, சுழற்றும் பொறி, எரிக்கும் பொறி—இவை முக்கிய இயந்திரப் பகுதிகள். இவற்றின் மூலம் செல்லும் மேற்கண்ட பொருள்கள், **சிமிட்டிப் பொடியாக** வெளிவருகின்றன!

பின்பு இவற்றைச் சணல், அல்லது காகிதப் பைகளில் போட்டு வெளியிலே அனுப்புகிறார்கள்! ஒரு டன் சிமிட்டியை ரூபாய் 100 வரை விற்கிறார்கள்! **10 ரூபாய்** மதிப்புள்ள இந்த மண்களை **100 ரூபாய்** மதிப்புடன் சிமிட்டி என்ற பெயரில் விற்கிறார்கள்! பணம் சேர்க்கிறார்கள்!

திராவிடத்தில் சிமிட்டித் தொழிலின் சரித்திரமானது, ஓர் சமீப கால நிகழ்ச்சியே யாகும்! ஏன் இந்திய உபகண்டத்திலேயே இது ஒரு சமீப கால நிகழ்ச்சிதான்!

1904க்கு முன் தென்னாட்டிலோ வடநாட்டிலோ சிமிட்டித் தொழிற்சாலை என்பதையே பார்த்திருக்க முடியாது. **1904-ல்**தான், இந்திய உபகண்டத்திலேயே **முதன் முதலாக சென்னையில்** ஓர் சிமிட்டித் தொழிற்சாலை திறக்கப்பட்டது. 1914-ல் கூட இந்தியாவில் மூன்று கம்பெனிகளே இருந்தன.

இந்தச் சமயத்திலேதான் **முதல் உலகப் பெரும் போர்** துவங்கியது! போர் துவங்குகிறது என்றால் தொழில்கள் வளரும் என்று—பொருள்! இந்தக் கால

ணத்தினால் முதல் பெரும் உலகப் போரின்போது சிமிட்டித் தொழில் வெகு விரைவாக வளர்ச்சியடைந்தது!

1924ல் இந்தியாவில் தென்னாட்டிலும் வடநாட்டிலுமாக 10 சிமிட்டித் தொழிற்சாலைகள் இருந்தன அவை ஆண்டொன்றுக்கு 6 லட்சம் டன் சிமிட்டி உற்பத்தி செய்தன. அப்போது அந்தக் கம்பெனிகளுக்குள் பலத்த போட்டி ஏற்பட்டது. கம்பெனிகளுக்குள் போட்டி ஏற்பட்டால், பொருள்களின் விலை குறையும் அல்லவா? சிமிட்டி விலையும் குறைந்தது. இந்தக் குறைந்த விலைக்கு விற்க முடியாத நிலையில் இருந்த சில கம்பெனிகள் மூடப்பட்டன! சிமிட்டித் தொழில் வளர்ச்சியும் தடைப்பட்டது—முதலாளிகளின் பணப் பெட்டியும் குறைந்தது.

இந்த நிகழ்ச்சி முதலாளிகளிடையே ஒரு பரபரப்பை ஊட்டிற்று. எனவே, சிமிட்டி முதலாளிகள், 1927-ல் "**சிமிட்டி உற்பத்தியாளர் சங்கம்**" என்று ஒன்றை ஏற்படுத்திக்கொண்டார்கள், 1930-ல் அதே முதலாளிகள் "**சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி**" என்ற ஒரு அமைப்பையும் ஏற்படுத்திக் கொண்டார்கள்!

"முதலாளிகளாகிய நமக்குள் போட்டா போட்டிகள் கூடா—நமது நோக்கம் பணம் சம்பாதிப்பதே! முதலாளிகளாகிய நமக்குள் போட்டி இருந்தால் லாபம் அடிக்க முடியாது. நமக்குள் ஒற்றுமை இருந்தால் எவ்வளவு வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம். எல்லாக் கம்பெனிகளின் சிமெண்டையும் ஒரே விலைக்கு விற்க வேண்டும்"—என்று அந்த முதலாளிகள் தீர்மானித்தார்கள்!

இந்தத் தீர்மானத்தால் சிமிட்டி விலை ஏறிற்று. முன்பெல்லாம் ஒரு கம்பெனி 50 ரூபாய்க்கு விற்கும் சிமிட்டியை, இன்னொரு கம்பெனி 45-க்கும், மற்றொன்று 40-க்கும் விற்கும் போட்டியின் காரணத்தால்! இப்போது, முதலாளிகளிடையே ஒற்றுமை ஏற்பட்ட காரணத்தால் அதே சிமிட்டியை 60 அல்லது 70 ரூபாய்க்கு மக்கள் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் 1936-ல் "**அசோசியேட் சிமெண்ட் கம்பெனி**" (ஏ. சி. சி) என்ற பெயரில், சில மார்வாரிகளும், சேட்டுகளும் சேர்ந்து, ஒரு பெரிய கம்பெனியைத் துவக்கி, மிக நுணுக்கமாக நடத்தினார்கள்; வடக்கிலும் தெற்கிலும் பல சிமிட்டித் தொழிற்சாலைகளைத் துவங்கினார்கள். தொழில் வளர்ச்சியடைந்து கொள்ளை லாபம் கிடைத்தது அவர்களுக்கு!

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தார் **சேத் டாலமியா!** நாக்கிலே நீர் ஊறிற்று டால்மியாவுக்கு! மற்ற சேட்கள் மண்ணைப் 'பொன்'-னாக்கி விற்கும்போது, தான் ஏன் சும்மா இருக்க வேண்டும் என்று தோன்றிற்று அவருக்கு!

கல்லக்குடிக்கு 1938-ல் ஓடி வந்தார்—சுண்ணாம்பு, ஜிப்சம், களிமண் மூன்றும் அருகருகே கிடைப்பதைக் கண்டார். ஆனந்தம் பொங்கிற்று! அடுத்த ஆண்டில் இங்கோர் தொழிற்சாலை நடத்த ஆரம்பித்தார்! லாபம் பொங்கிற்று.

இதற்குள் **வடக்கே** சில கம்பெனிகளும் **டால்மியா**வால் துவக்கப்பட்டன. ஏ. சி. சி-க்காரர்களும் பல கம்பெனிகளைத் துவக்கினார்கள்!

மறுபடியும் போட்டி! **டால்மியா** சேட்டுக்கும், **அசோசியேட் சிமெண்ட் கம்பெனிக்கும்** இடையே பெரும் போட்டி ஏற்பட்டது.

2-ம் உலகப் பெரும் போரும் ஆரம்பமாகியது. சிமிட்டி விலையும் அதிகரித்தது. பின்பு 1940ல் **டால்மியா**வும், **A. C. C**-க்காரர்களும், போட்டியை நிறுத்தி, "**இந்திய சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி**" என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு அதன் மூலம், தங்கள் சிமெண்டுகளை அதிக விலைக்கு விற்க ஆரம்பித்தனர். ஒரு டன் சிமிட்டி 30 ரூபாயிலிருந்து 50 ரூபாய்க்கு ஏறிற்று!

போர் முடிந்த பின்பு அரசாங்கம் சிமிட்டி உற்பத்தியைப் பெருக்க ஓர் திட்டம் தயாரித்தது. அதிலும் ஓரளவு பயனும் கிட்டியது.

1947-ல் வெள்ளையர் ஆட்சி முடிந்து, விடுதலை கிடைத்ததல்லவா? அப்போது இந்தச் சிமிட்டி முதலாளிகளான சேட்டுகளுக்கும முழு விடுதலை கிடைத்தது!

டன் 60 ரூபாயாக இருந்த சிமிட்டியை ஆறே மாதத்துக்குள் 1948-ல் ரூபாய் 87½-க்கு உயர்த்தினார்கள் சிமிட்டி முதலாளிகள்! ஏன் என்று கேட்பாரில்லை! விடுதலை கிடைத்துவிட்டதல்லவா?

மொத்தம் **23 தொழிற்சாலைகளில் 5 தொழிற்சாலைகள் பாகிஸ்தானை**ச் சேர்ந்தன. மிகுதி 18-ம் இந்தியாவில் இருந்தன. இந்த 18 பாக்டரிகளும் உற்பத்தி செய்த விபரம் கீழே தரப்படுகிறது:—

ஆண்டு	உற்பத்தி
1947	14,41,335 டன்
1948	15,56,450 டன்
1949	21,06,140 டன்
1950	26,13,020 டன்
1951	31,95,442 டன்
1952	34,00,000 டன்

ஒரு காலத்தில் டன் 30 ரூபாய்க்கு விற்ற அதே சிமிட்டி 1953ல் 100 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. லாபம் பல மடங்கு ஏறவே, இதை அரசாங்கமும் அனுமதிக்கவே, முதலாளிகள் சேர்ந்துகொண்டு 14 லட்சம் டன்னிலிருந்து ஐந்தே ஆண்டு

களில் 34 லட்சம் டன்னுக்கு உற்பத்தியை உயர்த்தி, பலகோடி ரூபாய்களை மிக இலேசில் தட்டி விட்டார்கள்!

இப்போது இந்திய உபகண்டத்தில் மொத்தம் 28 சிமிட்டித் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றின் விவரம்:

உரிமையாளர்	தொழிற்சாலைகள்	உற்பத்தி சுமார்
ஏ. சி. சி.	14	21,00,000 டன்கள்
டால்மியா	5	7,00,000 ,,
மற்றவர்கள்	9	7,25,000 ,,

மேலே காணப்படும் புள்ளி விபரம், சிமிட்டித் தொழில் யார் கையிலே சிக்கிக்கொண்டு விட்டது, எவர்களுடைய ஆதிக்கத்திலே இருக்கிறது என்ற உண்மையை நன்கு புலப்படுத்தும். வடநாட்டைச் சேர்ந்த ஒரு சில சேட்டுகளின் கையில் சிமிட்டித் தொழில் முழுவதும் அகப்பட்டுக் கொண்டு விட்டது.

வெளிநாட்டிலிருந்து சிமெண்ட் இறக்குமதி அனுமதிக்கப்படுவதில்லை; தேவைப்படுவோர் கட்டாயம், இவர்களுடைய சிமெண்டையே வாங்க வேண்டும்.

இந்திய சிமிட்டித் தொழிலில், (1) ஏ. சி. சி. குரூப் (2) டால்மியா குரூப் இரண்டும்தான் பெரியவை என்று இந்திய சர்க்காரே அங்கீகரித்திருக்கிறது. சிமெண்டின் விலையைக்கூட, இந்த இரண்டு 'குரூப்' காரர்களையும் கேட்டுக்கொண்ட பிறகே டில்லி சர்க்கார் நிர்ணயிக்க வேண்டுமாம்! இவர்களைக் கேட்காமல் எதுவும் சர்க்கார் செய்ய முடியாதாம். இதன் பொருள்-சிமிட்டித் தொழில் முழுவதும் - ஏ. சி. சி. டால்மியா இந்த இருவரின் ஏக போக உரிமை உடையது. இவர்களுக்கு எதிராக எதுவும் நடக்காது என்பது தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? நாம் வாங்கும் சிமெண்டின் லாபப் பணம் இந்த இருவருடைய பணப் பெட்டிக்கும் போகாது வேறு எங்கே போக முடியும்?

திராவிடத்தில் இன்றைய தினம் 7 பெரிய சிமெண்ட் தொழிற்சாலைகள் உள்ளன. கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மதுக்கரை. திருச்சி மாவட்டத்தில் உள்ள கல்லக்குடி, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தாழையூத்து—ஆகிய தொழிற்சாலைகள் இவற்றில் மிகப் பெரியவை!

தென்னாட்டின் தொழிற்சாலைகள் :—

எண்	உரிமையாளர்	தொழிற்சாலை	உற்பத்தி
1	டால்மியா	கல்லக்குடி (டால்மியாபுரம்)	2,20,000 டன்கள்
2	ஏ. சி. சி.	மதுக்கரை	2,80,000 ,,
3	ஏ. சி. சி.	மங்களகிரி	80,000 ,,
4	மற்றவர்கள்	பெஜவாடா	90,000 ,,
5	,, ,,	தாழையூத்து	1,00,000 ,,
6	,, ,,	கோட்டயம்	50,000 ,,
7	,, ,,	பத்ராவதி	80,000 ,,
7		மொத்தம்...	9,00,000 டன்கள்

திராவிடத்தின் தொழிற்சாலைகள், சராசரி ஆண்டொன்றுக்கு 10 கோடி ரூபாய் மதிப்புள்ள சிமெண்டைத் தயாரிக்கின்றன; கடந்த 15 ஆண்டுகளில் 100 முதல் 150 கோடி ரூபாய்களை அவை சம்பாதித்துள்ளன. ஆனால் இந்த 100 அல்லது 150 கோடி ரூபாய்கள் நமது பணப் பெட்டியில், தென்னாட்டில் இல்லை! எந்த சேட்டுகளும், மார்வாரிகளும் இதன் முதலாளிகளோ, அவர்கள் வாழும் வடநாட்டில்,—காட்சியளிக்கிறது.

டால்மியா ஒரு வடநாட்டு சேட்; பெரிய பணக்காரர்.

போர் துவங்குமுன், 1938-ல் 5 சிமிட்டித் தொழிற்சாலைகளை அவசர அவசரமாக அமைத்து, போர் முடிவதற்குள் திடீர் லட்சாதிபதியாகி, லட்சம், லட்சமாக ஒவ்வொரு வருடமும் மலையெனக் குவித்துவிட்டார்!

டால்மியாவின் தொழிற்சாலைகளில் தலைமையானது, அதிக லாபத்தைக் அள்ளி அள்ளித் தந்தது, கல்லக்குடியில் உள்ள டால்மியாபுர தொழிற்சாலைதான்! 30 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட சிமிட்டியை இதுவரை அந்தத் தொழிற்சாலை ஆக்கி அளித்திருக்கிறது.

கல்லக்குடி தொழிற்சாலைக்குப் பல வசதிகளும், சலுகைகளும், மற்றவற்றிற்குக் கிடைக்காத அளவு கிடைத்திருக்கின்றன. மூலப் பொருள்களில் முக்கியமான சுண்ணாம்பு, களி மண், ஜிப்சம் மூன்றும் மிக அருகே 10 மைல் சுற்றளவுக்குள் கிடைக்கிறது. அத்துடன் அம் மண்ணிலேயே பீங்கான்கள், தொட்டிகள் முதலியன செய்யவும் வசதி கிடைத்திருக்கிறது.

திருச்சி தபாலாபீசிலிருந்து, 16 மைல்களுக்கப்பால் உள்ள

இத்தொழிற்சாலைக்குப் போன் மூலம் பேசுவதற்குக்கூட கட்டணம் **இரண்டணாத்**தான்! தபால் இலாக்கா சலுகை அளித்திருக்கிறது! இடையில் உள்ள லால்குடிக்கு **நான்கணா** தரவேண்டும்! இது ஒரு சிறிய சலுகைதான்! இதுபோன்ற சலுகைகள் பல டால்மியா கம்பெனி பெற்றிருப்பதாகக் கேள்விப்படுகிறோம்!

திராவிட மண் பொன் போன்றது—அதன் ஒரு துளி மண்ணும் வீண் போவதில்லை. இந்த மண்ணில் பணப் பயிர்களை, உணவுப் பொருள்களை விளைவிக்கலாம்; மரங்களை வளர்க்கலாம். மண்ணைத் தோண்டி நிலக்கரியை, இரும்பை, தங்கத்தை, வைரத்தை, வைடூரியத்தை எடுக்கலாம். அணுசக்திப் பொருளான **சேரலைட்டை** உற்பத்தியாக்கலாம்; செங்கல்லும், ஓடும் செய்யலாம்; அத்துடன் சிமிட்டியையும் தயாரிக்கலாம்.

திருச்சி மாவட்டத்திலே **1,50,00,000 (1½ கோடி)** டன் **ஜிப்சம்** இருக்கிறது! திருச்சி, நெல்லை, சேலம், மதுரை மாவட்டங்களில் **2,00,00,000(2கோடி) டன் சுண்ணாம்புக் கல்** இருக்கிறது; எங்கும் ஏராளமான 'சத்து மண்ணும்' இருக்கிறது! இவற்றைக் கொண்டு சிமிட்டி தயாரித்தால் **500 கோடி ரூபாய்** சம்பாதிக்கலாம்!

நம் நாடு நமது மாவட்டம், நம்முடைய ஊரில் தான் இருக்கிறது இந்த மண்!

—"தீப்பொறி"

"ஆரம்பக் கல்வி"
ஆபீஸ்

❊

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

❊

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 3-0

ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1-0

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

Form of Certificate of Income.
வருமான நற் சாட்சிப் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

தபால் செலவு உட்பட

❊

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

ருசிகரமான சம்பவங்கள்!

[பழம்நீ]

சிறுகதை!

டாக்டர் வெல்லிங்டன் லண்டனில் நடந்த கூட்டம் ஒன்றில் கீழ்க்கண்ட அழகிய கதை ஒன்றைச் சொன்னாராம். சீனாவில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு அடிக்கழி இருக்குமாம். குடும்பத்தில் உள்ள யாரையாவது தண்டிக்க வேண்டுமானால் குடும்பத் தலைவர் அந்தக் கழியைக் கொண்டு அவர்களை அடிப்பார். ஒரு சமயம் ஒரு நூறுவயதுத் தகப்பனார் தம் எழுபத்தைந்து வயது பிள்ளையின் மீது அக்கழியைப் பிரயோகித்து விட்டார்.

அடிபட்டதும் பிள்ளை அழத் தொடங்கிவிட்டார். இதைக் கண்டதும் தகப்பனாருக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. இது வரையில் தகப்பனார் எத்தனையோ தடவை பிள்ளையை அடித்திருக்கிறார். பிள்ளை அழுதது கிடையாது. ஆகவே என்ன காரணம் என்று விசாரித்தார். அதற்கு பிள்ளை "நீங்கள் அடித்ததற்காக அழவில்லை. ஆனால் அடி வழக்கம்போல் வலுவாக விழவில்லை. உங்கள் வலு குறைந்துவிட்டதே என்று வருத்தப்பட்டு அழுதேன்" என்று சொன்னாராம்.

சிறையில் என். எஸ். கிருஷ்ணன்

விடுதலையான திரு என். எஸ். கிருஷ்ணனைப் பார்ப்பதற்கு நாகர் கோவிலுக்கு ஒரு நண்பர் சென்றிருந்தார். அப்பொழுது திரு. என். எஸ். கிருஷ்ணன் தமது மனைவி திருமதி மதுரத்தைச் சுட்டிக்காட்டிச் சொன்னாராம், "சிறையில் டாண் என்று அடித்ததும் ஐந்து மணிக்கே எனக்குக் காப்பி கிடைத்துவிடும். இங்கே என்னடா என்றால் காப்பி கிடைக்க மணி ஏழு ஆகிறது. நான் மீண்டும் சிறைக்கே சென்றுவிடுகிறேன்" என்று.

சிப்பாய்

சிப்பாய்கள் தங்களுடைய துணிமணிகளை எல்லாம் கெட்டுப்போகாமல் வைத்திருக்கிறார்களா என்று பரிசோதிக்கும் தினம். எல்லாச் சிப்பாய்களும் வரிசை வரிசையாக நின்றுகொண்டிருக்கிறார்கள். பெரிய துரையும் இன்னும் இரண்டு துரைகளும் ஒவ்வொரு சிப்பாயாகக் கேள்வி கேட்டுக்கொண்டு வருகிறார்கள். கடைசியாக ஒரு சிப்பாயிடம் வந்ததும், பெரிய துரை அவனைக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்.

"உனக்கு எத்தனை சட்டைகள்"?

"மூன்று, ஒன்று போட்டுக்கொண்டிருக்கிறேன். ஒன்று சலவைக்குப் போயிருக்கிறது. ஒன்று பெட்டியில் இருக்கிறது"

"உனக்கு எத்தனை ஜதை பூட்ஸ்கள்.?"

"இரண்டு, ஒன்று போட்டுக் கொண்டிருக்கிறேன். ஒன்று பெட்டியில் இருக்கிறது"

"எத்தனை ஜதை மேல்ஜோடுகள்"

"இரண்டு, ஒன்று போட்டுக் கொண்டிருக்கிறேன். ஒன்று பெட்டியில் இருக்கிறது"

"எத்தனை கால் சட்டைகள்?"

"மூன்று. ஒன்று போட்டுக் கொண்டிருக்கிறேன். ஒன்று சலவைக்குப் போயிருக்கிறது. ஒன்று பெட்டியில் இருக்கிறது"

"சரி, உன்னுடைய பெட்டி எங்கே?"

"பெட்டியைத்தான் காணோம்!"

6 ஆசிரியர்கள்

எனக்கு ஆறு ஆசிரியர்கள் இருந்தார்கள். எனக்கு எல்லா விஷயங்களும் அவர்கள்தான் சொல்லிக் கொடுத்தார்கள். அவர்கள் பெயர்களாவன: எங்கே, என்ன, எப்பொழுது, ஏன், எப்படி, யார்?

சிங்கமும் குரங்கும்

எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை தேறின ஒரு பையனுக்கு வேலை கிடைக்கவில்லை. அதற்காக ஒரு சர்க்கஸ் கம்பெனிக்காரரைப் பார்த்து வேலை கேட்டான். அவர் சொன்னார், "அப்பா! என்னிடம் தற்சமயம் ஒரு குமாஸ்தா வேலையும் காலிகிடையாது. என்னிடம் வேடிக்கை, வேடிக்கையாக வேலை செய்யும் ஒரு குரங்கு இருந்தது. அது சமீபத்தில் இறந்துவிட்டது. அதன் தோலை எடுத்து வைத்திருக்கிறேன். அதன் தோலை வேண்டுமானால் நீ போர்த்திக் கொண்டு குரங்கு மாதிரி ஆடு. சம்மதமிருந்தால் சொல்லு. இதைத் தவிர தற்சமயம் என்னிடம் வேறு ஒரு வேலையும் காலி கிடையாது" என்றார்.

எஸ். எஸ். எல். ஸி. தேறின அந்தப் பையன் வேறு வழியின்றி வேலையை ஒப்புக்கொண்டான். அன்றிலிருந்து குரங்குத் தோலைப் போர்த்திக்கொண்டு குரங்குபோல் நடிக்கவும் தொடங்கினான்.

ஒருநாள் இவன் உயரத்தில், கம்பியில் தொங்கிக்கொண்டிருந்தபோது தற்செயலாகக் கீழே இருந்த சிங்கக் கூண்டில் விழுந்துவிட்டான். 'ஆ' என்று வாயைத் திறந்துகொண்டிருந்த சிங்கத்தைக் கண்டதும் பையன் நடுங்கிவிட்டான். வாய்பிதற்றவும் ஆரம்பித்து விட்டான். இதைப் பார்த்து சிங்கம், "அப்பா! கவலைப்படாதே. நீ எப்படி நிஜக்குரங்கு அல்லவோ, அதைப்போல நான் நிஜ சிங்கம் அல்ல. நான் பி. ஏ. பாஸ் பண்ணிவிட்டு வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருந்த சமயத்தில் இந்த வேலை கிடைத்தது. ஒப்புக் கொண்டேன்" என்று சொல்லிற்று.

மர்மம்

"நான் ஒரு மர்மத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன்"

"அது எந்தப் பத்திரிகையில் வெளிவரப் போகிறது?"

"அதுதான் மர்மமாயிருக்கிறது"

வியாபாரி

வியாபாரி: சைக்கிள் ரூ. 200 தான். ஒன்று வாங்கிக்கொண்டால் ஜம்மென்று சவாரி செய்யலாம்.

நாட்டுப்புறத்தான்: ரூ. 200 ஆ? அதைக்கொண்டு ஒரு எருமைமாடு வாங்கலாமே!

வியாபாரி: எருமை மாட்டின் மீது, சவாரி செய்தால் ஜனங்கள் சிரிக்கமாட்டார்களா?

நாட்டுப்புறத்தான்: சைக்கிளைப் பால் கறந்தால் ஜனங்கள் சிரிக்க மாட்டார்களா?

விளம்பரம்

ஒரு பெரிய மனிதர் வீட்டு நாய் காணாமல்போய்விட்டது. உடனே அவர் பக்கத்தில் இருந்த ஒரு பத்திரிகை ஆபீசுக்குச் சென்றார். நாயின் அடையாளங்களைத் தெரிவித்து அதைத் தேடிக் கண்டு பிடிப்பவர்களுக்கு ரூ. 50 இனாம் கொடுப்பதாக விளம்பரம் போடச் சொல்லி விட்டு வீட்டுக்குத் திரும்பினார். சற்று நேரத்திற்குப் பிறகு ரூ. 50 போதாது என்று அவருக்குப்பட்டது. அதை ரூ, 100 ஆக்க வேண்டுமென நினைத்தார். இதைத் தெரிவிப்பதற்காக மீண்டும் பத்திரிகை ஆபீசுக்குச் சென்றார்.

ஆனால் ஆபிசில் சற்று முன்னால் சந்தித்த ஆசிரியர், உதவி ஆசிரியர், மானேஜர், காஷியர் முதலியவர்கள் யாரையும் காணவில்லை. ஒரே ஒரு சின்னப் பையன் மாத்திரம் இருந்தான். "எங்கே எல்லாரும்?" என்று கேட்டார் பெரிய மனிதர்.

"எல்லாரும் தங்கள் நாயைத் தேடுவதற்காகப் போயிருக்கின்றார்கள்" என்று பதில் அளித்தான் பையன், அவர் அப்படியே ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டார்.

திருடன்

ஞாபக மறதியுள்ள கலாசாலை ஆசிரியர் ஒருவர் வீட்டுக்கு ஏதோ கேட்பதற்கு வந்தார். தம் கட்டிலுக்கு அடியில் ஏதோ சப்தம் கேட்கவே, "கட்டிலுக்கு அடியில் யாராவது இருக்கிறார்களா?" என்றுகேட்டார். கட்டிலுக்கு அடியில்ஒளிந்துகொண்டிருந்த திருடன், "யாரும் இல்லையே" என்று பதில் அளித்தான். "என்ன ஆச்சரியமாக இருக்கிறதே! கட்டிலுக்கடியில் சப்தம் கேட்டாற்போல் தோன்றிற்று, யாரும் இல்லையே என்று பதில் வருகிறதே" என்று ஆசிரியர் தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்.

வண்டி நகரவில்லை!

ஒரு நண்டு, ஒரு தவளை, ஒரு அன்னம் மூன்றும் ஒரு சிறு வண்டியை இழுக்க ஆரம்பித்தன, வண்டி சிறிய வண்டிதான், ஆனால் அது இருந்த இடத்திலிருந்து நகரவில்லை. காரணம், அன்னம் வண்டியை ஆகாயத்துக்கு இழுத்தது. தவளை குட்டையை நோக்கி இழுத்தது. நண்டு பின்னுக்கு இழுத்தது. இதில் யார் செய்தது தப்பு, அல்லது யார் செய்தது சரி என்று நமக்குத் தெரியவும் தெரியாது. அதைப்பற்றி நாம் கவலைப்படவும் இல்லை. ஆனால் வண்டி நகரவில்லையே! அதுதான் நமக்குத் தெரியும்.

பிச்சைக்காரன்

1வது பிச்சைக்காரன்: திடீரென்று உனக்குப் பத்தாயிரம் ரூபாய் கிடைத்தால் என்ன செய்வாய்?

2வது பிச்சைக்காரன்: பிச்சை எடுப்பதற்கு இந்தப் பழைய தகர டப்பா வைத்திருக்கிறேனே, அதைத் தூக்கி எறிந்துவிட்டு பிச்சை எடுப்பதற்கு, தங்கத்தினால் ஒரு கிண்ணம் செய்து வைத்துக்கொள்வேன்.

1வது பிச்சைக்காரன்: அது தானே பார்த்தேன், எங்கே பணம் கிடைத்ததும் பழைய வேலையை விட்டுவிடுவாயோ என்று பயந்தேன் என்று கூறினான்.

கொலைத் தண்டனை

ஒரு திருடர் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் போலீசுக்கு ஏதோ உளவு சொல்லிக் கொடுத்து விட்டான் என்பதற்காகத் திருடர் தலைவன் அவனுக்குக் கொலைத் தண்டனை விதித்தான். தண்டனையை நிறைவேற்றுவதற்காக இவனை இன்னொரு திருடன் தொலைவிலுள்ள ஒரு இடத்தில் கொலை செய்வதற்கு இழுத்துச் சென்றான். போகும் வழியெல்லாம் ஒரே கல்லும் முள்ளுமாக இருந்தபடியால் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டவன் மிகவும் அவதிப்பட்டான். "இப்படி கல்லிலும், முள்ளிலும் என்னை இழுத்துச் செல்கிறாயே! நியாயமா?" என்று கேட்டான்.

அதற்கு அவனை இழுத்துச் சென்றவன், 'உனக்குப் பரவாயில்லையே! நான் இந்தக் கல்லிலும் முள்ளிலும் திரும்பிவந்தாக வேண்டுமே என்று மனக்கவலையுடன் கூறினான்.

ஓவியம்

"என்னப்பா வரைந்துகொண்டிருக்கிறாய்?"

"சித்திரம் வரைந்துகொண்டிருக்கிறேன்"

"என்ன சித்திரம்?"

"பசுமாடு புல்லைத்தின்பது போல் ஒரு காட்சி"

"ஆனால் புல்லைக் காணோமே!"

"புல்லை மாடு தின்றுவிட்டது"

"மாட்டையும் காணோமே!"

"புல்லைத் தின்றபிறகு அது எதற்காக இங்கே நிற்கிறது?"

—"தனி அரசு"

செயற்கரிய செயல் புரிந்த செம்மல்

[ஜீ. என். இராதாகிருஷ்ணன்]

நாற்பது வயதாகுமுன் ஹென்ரி போர்டு மிகவும் சாதாரணமானவர். ஆனால் அவர் தமது ஐம்பதாவது வயதில் உலகத்திலுள்ள பெருஞ் செல்வர்களோடும் மிகப் பெரியவர்களோடும் நெருங்கிப் பழகக்கூடியவரானார். அவர் வாயினின்று பிறந்த ஒவ்வொரு சொல்லையும், அது புகை பிடிப்பது பற்றியதாயினும், விவாகரத்துப் பற்றியதாயினும், தற்கால நாட்டியம் பற்றியதாயினும் பத்திரிகைகள் வெளியிடலாயின. "சரித்திரம் என்பது வெறும் ஏய்ப்பேயாகும்" என்று ஒருமுறை அவர் சொல்லிவிட்டார். அதுபற்றி பெரிய விவாதம் ஏற்பட்டது; காலஞ் செல்லச் செல்லத்தான் அவ்விவாதம் மறைந்தது.

ஹென்றி போர்டின் நாற்பது வயதுக்கும் ஐம்பது வயதுக்கும் உட்பட்ட காலம் அவரது வாழ்க்கையில் முக்கியமானது. அக்காலத்தில் மோட்டார்த் தொழில் மிகவும் வளர்ச்சியுற்றது. அக்காலத்தில் அவர் துணிந்து எண்ணினார், சோதனைகள் செய்து பார்த்தார், வெற்றி கண்டு மகிழ்ந்தார். அதன் காரணமாகவே முற்போக்கான உற்பத்திக் காலம் ஆரம்பமாயிற்று. ஹென்றி போர்டு உற்பத்தித் துறையில் முதன்மையானவராக விளங்கினார்.

ஹென்ரி போர்டு 1863, ஜூன் 30ம் தேதி மிச்சிகனில் பிறந்தவர். கால் என்ஜின் மெக்கானிக்காக இருந்தவர். பல கோடி டாலர் மதிப்புள்ள தொழிலுக்குச் சொந்தக்காரரானார். அவர் தன்னம்பிக்கையும் மனத்திண்மையும் உள்ளவர்; ஆதலால், அவரது முயற்சிகளுக்கு எந்தவித முட்டுப்பாடும் நேரவில்லை. அவர் தமது உறுதியாலும் கூர்த்த மதியாலும் இடர்ப்பாடுகளையெல்லாம் வென்றார். இதற்கு அவரது வாழ்க்கையில் பல உதாரணங்கள் காட்டலாம்.

சரியான கூலியும், சரியான விலையும்

1914ல் ஒரு ஞாயிற்றுக் கிழமை, நாளொன்றுக்குக் குறைந்த கூலி 5 டாலர் என்றும், ஒன்பது மணியாயிருந்த வேலை நேரத்தை எட்டு மணி ஆக்கியாயிற்று என்றும் அவர் அறிவித்தார். அதனால் அமெரிக்கா முழுவதுமுள்ள மக்களைக் கவர்ந்துவிட்டார். அக்காலத்தில் நாளொன்றுக்குக் கொடுக்கப்பட்டது 2 டாலர்தான். வேலை கொடுப்போர் டெட்ராயிட்

நகரிலிருந்து போய்விடுவர், அல்லது கஷ்டப்பட்டுப் போவர்; அதனால் டெட்ராயிட் பாழாகி விடும் என்று சொன்னார்கள். கூலியைக் கூட்டினால், வேலை செய்வோருடைய வாங்கும் சக்தி அதிகமாகும். அவர்களது வாங்கும் சக்தி அதிகமானால், மற்றவர்களது வாங்கும் சக்தியும் அதிகமாகும். இவ்வாறு ஒன்றை பொன்று சார்ந்து வாங்குவதும் விற்பதும் அதிகமாகிக் கொண்டே போகும். இதுவே ஹென்ரி போர்டின் கருத்து.

அவர் செய்துபார்த்த இந்தச் சோதனை மிகவும் வெற்றியாக விளங்கியது. எனவே ஐந்து ஆண்டுகளுக்குப் பின் நாளொன்றுக்குக் குறைந்த சம்பளம் 6 டாலராக உயர்த்தப்பட்டது. சரியான கூலி, சரியான விலை என்பவை யாவை என்று ஹென்ரி போர்டு பின்வருமாறு சொன்னார்:

“சரியான விலை என்பது வாங்குபவன் தாங்குவான் என்பதைக் கருதிக் குறிப்பதன்று; சரியான கூலி என்பது ஒருவன் எவ்வளவு குறைந்த காசுக்கு வேலை செய்வான் என்பதைக் கண்டு நிர்ணயிப்பதன்று. விற்றுக்கொண்டேயிருப்பதற்கு ஒரு பொருளுக்கு வைக்கக்கூடிய குறைந்த தொகையே அதன் சரியான விலை. வேலை செய்பவனுக்கு முதலாளி ஒழுங்காகக் கொடுக்கக் கூடிய உயர்ந்த சம்பளமே சரியான சம்பளம்”

ஒரு புது முறை

மோட்டார்க் காரின் பல பகுதிகளைச் செய்து அவற்றை இணைத்துக் கார் ஆக்குவதற்கு ஹென்றி போர்டு ஒரு புது முறையைக் கையாண்டார். அம்முறை பொருள் உற்பத்தித் துறையில் ஒரு புரட்சி உண்டாக்கியது. மோட்டார்க்காரின் பகுதிகளை இணைக்க வேண்டிய ஒழுங்குப்படி தொகுத்து வைத்திருப்பார்கள்; எல்லாப் பகுதிகளையும் ஒரே இடத்தில் பொருத்துவதில்லை; தொழிலாளிகள் இடம் விட்டு இடம் நகர்வதில்லை; உருவாகும் கார்தான் அந்தந்தப் பகுதியைப் பொருத்தும் தொழிலாளி இருக்கும் இடத்துக்கு நகர்ந்து வரும். இவ்வாறு ஒவ்வொன்றாய்ப் பகுதிகள் இணைக்கப்பெற்று இறுதியில் கார் உருவாகும். அதுவே அவர் கண்ட முறை. இம் முறை முற்றும் புதிதாய் இல்லாவிடினும், அதனை அவர் மோட்டார்த் தொழிலில் தழுவியது மிகப் பெரிய நிகழ்ச்சியேயாகும். அதற்குமுன் ஒரு காரின் பகுதிகளைப் பொருத்திக் கார் உருவாக்குவதற்கு 6 மணி நேரமாயிற்று. இந்தப் புது முறையால் அதனை 93 நிமிஷங்களில் உருவாக்கக் கூடியதாயிற்று. எனவே, போர்ட் கார் விலையை அதிகமாகக் குறைத்துவிற்றார். எண்ணிறந்த மக்கள் கார் வாங்கக் கூடியதாயிற்று.

இது குறித்த கதை ஒன்று உண்டு. காரின் பகுதிகள்செய்

யும் விசேஷ இயந்திரம் ஒன்றை போர்டு தொழிற்சாலைக்குச் செய்து கொடுக்குமாறு போர்டு என்ஜினியர் ஒருவர் ஏற்பாடு செய்தார். மணிக்கு 200 பகுதிகள் செய்ய வேண்டும் என்பது ஒப்பந்தம். அதனைச் செய்து கொடுப்பவர், “நாளொன்றுக்கு 200 என்பதற்குப் பதிலாக மணிக்கு 200 என்று தவறாக எழுதிவிட்டீர்கள் போலும்” என்று சொன்னார். எந்த இயந்திரமும் அவ்வாறு செய்ய முடியாது என்பது அவர் நினைப்பு.

“அதில் தவறு ஒன்றும் இல்லை; மணிக்கு 200 பகுதிகள் செய்தல் வேண்டும். உங்களிடம் சொல்வதற்கு முன்பே நாங்கள் ஒரு இயந்திரம் செய்து பார்த்தோம். அது மணிக்கு 200 பகுதிகள் செய்கிறது. வந்து பாருங்கள்” என்று போர்டு தொழிற்சாலை என்ஜினியர் சொன்னார்.

முடியாதது என்று நினையாதவர்கள்

குறைந்த நேரத்தில் சிறந்த உற்பத்தி செய்யும் இயந்திரத்தைக் கண்டுபிடிக்கும் போதெல்லாம் ஹென்ரி போர்டுக்கும் அவருடைய என்ஜினியர்களுக்கும் குழந்தைகளுக்கு அதிசயமான ஒரு பொம்மை கிடைத்தால் மகிழ்ச்சி ஏற்படுவதுபோல மகிழ்ச்சி ஏற்படும். தொழிலாளி ஒருவன் ஒரு புதிய விஷயத்தைச் சொல்லி விட்டால், போர்டு அவனுக்கு வெகுமதியாக ஏராளமான பணம் கொடுப்பார். போர்டு தொழிற்சாலை விநோதமான முறைகளைக் கையாண்டு, செயற்கருஞ் செயல்களைச் செய்யும் அற்புதமான தொழிற்சாலையாக விளங்கியது. அந்தத் தொழிற்சாலையில் உள்ளவர்கள் தங்கள் திறமையைப் பற்றிய நம்பிக்கையுள்ளவர்களாக இருந்ததால், தங்களுக்குப் போட்டியாக உள்ள கார்க் கம்பெனிக்காரர்களைத் தங்கள் முறைகளை வந்து பார்க்கும்படி அழைத்தார்கள். “நிபுணர்கள்” எனப்படுவோரிடம் போர்டுக்கு நம்பிக்கை கிடையாது. ஆதலால், இவ்வாறு அருஞ் செயல்கள் செய்யக் கூடியதாயிற்று.

“விஷயத்தைப் பற்றி முன்னே அறியாதவர்களைக் கொண்டு தான் புதிய வேலைகளையெல்லாம் செய்கிறோம். ஆதலால்தான் எது ஒன்றையும் செய்ய முடியாதது என்று சொல்லும் நிலைமை ஏற்படுவதே இல்லை” என்று அவர் சொல்லியிருக்கிறார்.

எவ்வாறு அவரது எண்ணத்தில் புதிய கருத்துக்கள் தோன்றின என்று அவரிடத்தில் ஒரு முறை கேட்டார்கள். “யாதேனும் எண்ண வேண்டும் என்னும் விருப்பம் இருந்தால் போதும்; நாம் நம் வேலையைச் செய்து கொண்டே போனால், திடீரென்று புதிய கருத்து நமது உள்ளத்தில் தோன்றும்” என்று அவர் அக் கேள்விக்கு விடையிறுத்தார்.

போர்டுக்குப் புதியன கண்டுபிடிக்கும் ஆற்றல் இருந்ததுமன்றி, மிகத் திறமையாய் வாணிபத்தை நடத்தும் தகுதியும் இருந்தது. அவர் சென்ற நூற்றாண்டில் பல தந்திரமான காரியங்களைச் செய்திருக்கிறார். ஒரு முறை அவர் தமது தொழிலை மிகவும் விரிவுபடுத்தினார். அவருக்குப் பணமே இல்லாமற் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆயினும் அவர் தம் தொழிலை மிகவும் விரிவுபடுத்தியதால், இரண்டு வருஷத்திற்குள் அவரது வருவாய் இரு மடங்கு பெருகியது.

"போர்டு சமாதானக் கப்பல்"

ஹென்றி போர்டு தமது வாழ்க்கையின் பிற்பகுதியில் தேசத்திலுள்ள பெரியவர்களுள் ஒருவரானார். அக்காலத்தில் ஜனாதிபதிகள் அவரைப் பார்க்க வந்தார்கள். அவரே ஜனாதிபதி தேர்தலில் நிற்கப் போகிறார் என்னும் பேச்சும் இருந்தது. 1923ல் ஜனாதிபதி கூலிட்ஜை எதிர்த்து நிற்கத் தாம் விரும்பவில்லை என்று போர்டு அறிவித்தார். அப்போது ஜனாதிபதி கூலிட்ஜ் தாம் அதனை ஒரு பெருஞ் சிறப்பாகக் கருதுவதாகத் தந்தி கொடுத்தார். நல்ல வேலை செய்கிற ஒருவரைத் தாம் எதிர்க்கவில்லை என்று போர்டு சொன்னார்.

முதல் உலக யுத்தத்தை நிறுத்துவதற்கு அவர் செய்த முயற்சி உலகைக் கவர்ந்தது. நடுநிலைமை நாடுகள் போர் நிறுத்த முயற்சி செய்ய வேண்டும் என்பது அவரது கருத்து. பின்னர் "போர்டு சமாதானக் கப்பல்" என்று பெயர்பெற்ற ஆஸ்கர் என்னும் கப்பலில் யுத்தமே கூடாது என்னும் கூட்டத்தைச் சேர்ந்தவர்களையும், மற்றும் லட்சியவாதிகளையும் ஏற்றி நார்வே, சுவீடன் என்னும் நாடுகளுக்கு அவர் அனுப்பினார்.

1947ல் போர்டு இறந்தார். ஆனால் மிகப் பெரிய தர்ம ஸ்தாபனம் ஒன்றை அவர் நிறுவிச் சென்றார். அந்த ஸ்தாபனம் இன்று உலகிலுள்ள பல நாடுகளுக்கு உதவி அளிக்கிறது. இந்தியாவின் சமூக நலத் திட்டங்களுக்கு அந்த ஸ்தாபனம் உதவி அளிப்பது அதற்கு ஒரு சிறந்த உதாரணம்.

இன்று ஹென்றி போர்டு இல்லையெனினும், அவரது மாபெரும் அறநிலையத்தின் மூலமாய் அவர் பெயர் என்றும் நிலவுகிறது.

மூட்டு வாதம்

மூட்டுகளில் ஏதாவது கோளாறு ஏற்படு மட்டும் நாம் அவைகளைப் பற்றி நினைப்பதே கிடையாது. அவைகளில் ஒன்று காயப்பட்டு அல்லது வீங்கி, வலி உண்டாகும் பொழுது தான் நினைவு உண்டாகிறது, அப்பொழுது தான் மூட்டுகளின் அருமை பெருமை தெரிகிறது.

உலகம் எங்கும் லட்சக் கணக்கான ஜனங்கள் ஆர்த்ரைட்டிஸ் (arthrities) என்னும் மூட்டு வாத நோயினால் வாதைப்படுகின்றனர். வலியின் கொடுமையால் படுத்த படுக்கையிலேயே இருப்பவர் பலர். சக்கர நாற்காலியில் உட்கார்ந்தே காலம் தள்ளுபவர் அநேகர். அங்ஙனம் இருந்தும், இதைத் தைரியமாக சகித்துக் கொள்ளுகின்றனர். குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்புடைய ஒருவருக்கு வாதம் உண்டானால், அவர் வலியும் வேதனையும் அநுபவிக்கிறதோடு, வேலை செய்யவும் முடியாமல் போய், அவர் குடும்பமும் வறுமைக்குள்ளாகிக் கஷ்டப்படுகிறது. இவ்வியாதி பட்சபாதமின்றி யாருக்கும் வரக்கூடியது. வெகு சிலருக்கு இது கொஞ்சக் காலம் இருந்தது, பின் சுகமாகலாம். பெரும்பாலோருக்கு ஆயுட் காலம் முழுவதும் இருந்து, வேதனையை உண்டாக்கும்.

இந் நோயின் காரணத்தை அறிய மருத்துவர்கள் இன்னும் ஆராய்ச்சி நடத்திக்கொண்டு இருக்கின்றனர். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அநேக காரணங்கள் ஒன்று சேர்ந்தும் இந் நோய் உண்டாகலாம். பொதுவாக, சத்தற்ற உணவு இக் காரணங்களில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. வயது சென்றவர்களின் இரத்த நாளங்கள் முழு அளவு இரத்தத்தை உடல் எங்கும் கொண்டு செல்ல சக்தியற்றிருக்கலாம். இதனால் சில மூட்டுகளுக்குப் போதுமான இரத்தம் கிடைக்காமல் போகிறது. எனவே அந்த இடத்தில் வலி அல்லது வீக்கம் ஏற்படுகிறது. கடும் உழைப்பினால் கால் மூட்டு போன்ற இடங்கள் தேய்ந்து போய், மூட்டு அழற்சி உண்டாகலாம். ஒருவர் உடம்பில் தேவைக்கு மிஞ்சிய ஐம்பது பவுண்டு கொழுப்பு இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இதனைச் சுமப்பதால், மூட்டுகளும் கணுக்கால்களும் அதிக வேலை செய்கின்றன. அந்த இடங்களில் வலி அதிகமாகலாம். மூட்டுகள் நழுவலாம்: கால் எலும்பின் பாகம் அதிகம் பளுவைத் தாங்குவதால், வளைந்து போகலாம். எனவே மூட்டு வாதம் உண்டாகையில், எடை

யைக் குறைக்கவேண்டியது அவசியமாகிறது.

மூட்டு வாதத்தால் முதுகு வலி

முதுகு எலும்பு பல துண்டுகளால் ஆனது. தசைகளாலும், தசைக் கயிறுகளாலும் (tendons), எலும்புக் கயிறுகளாலும் (ligaments) இணைக்கப்பட்டுள்ளது. உடல் உறுதியாயிருக்க இவை யாவும் ஒத்து உழைக்கின்றன; ஆச்சரியமாக வளைந்து கொடுக்கின்றன. முதுகுத் தண்டின் குழல் வழியாக தண்டுவடம் அல்லது முதுகு நடு நரம்பு (spinal cord) செல்லுகிறது. உடல் எங்கும் பரவியிருக்கும் நரம்புக் கிளைகள் தண்டு வடத்திலிருந்து பிரிந்து செல்லுகின்றன. முதுகு ஒடிந்தால் மிகுந்த அபாயம் என்று சொல்லுவதற்குக் காரணம் இதுவே. மூட்டு வாதம் முதுகுத் தண்டைத் தாக்கும் பொழுது, உள்ளங்கைகளில் உண்டாகும் காய்ப்பு போன்ற ஒரு வகைத் தழும்பு (callus) வளர்ந்து, மூட்டுகளின் அசைவைத் தடுக்கும். அத் தழும்பு நரம்புகளை நெருக்கலாம். அப்பொழுது உடலின் பல பாகத்திலும் வலி உண்டாகும். அதிர்ஷ்ட வசமாக மூட்டு வாதம் சுகமானாலும், இந்தத் தழும்பு வளர்ச்சி இருந்து, நரம்புகளை உறுத்திக் கொண்டே இருக்கும்.

முதுகு வலியால் நெடுநாள் கஷ்டப்படுவோர் பலர் சிறுநீர்ப் பிரித்திக் (kidneys) கோளாறினால் தான் முதுகு வலிப்பதாக என்றுவார்கள். உண்மையில் பெரும்பாலும் முதுகுத் தண்டைப் பற்றிய வாதத்தினாலேயே அது ஏற்பட்டதாக இருக்கும். அனுபவம் வாய்ந்த டாக்டரால் அன்றி இதைக் கண்டு பிடிக்க முடியாது. இரண்டொரு எக்ஸ்-ரே படங்கள் எடுக்க வேண்டியது அவசியமாகலாம். சில வேளைகளில் நெஞ்சைச் சுற்றி வலி உண்டாகலாம். உடனே இது இருதய நோய் என்று நினைப்பார்கள். சில வேளைகளில் வயிற்றைச் சுற்றி வலி உண்டாகலாம். இது குடல் வால் அழற்சி (appendicitis) அல்லது பித்தப்பை நோய் என்று தீர்மானித்துவிடுவார்கள். முள்ளந்தண்டு வாதத்தால் அவதிப்படுகையில், அறுவை மருத்துவம் செய்து, குடல்வால் அகற்றிய பல கேசுகள் உண்டு.

ரூமட்டாய்ட் ஆர்த்ரைட்டிஸ்

மூட்டு வாதம் காயங்களினாலோ, கிருமித் தொற்றினாலோ, இரண்டு காரணங்களும் சேர்ந்தோ உண்டாகலாம். எதனால் உண்டாயிற்று என்று தீர்மானிப்பது மகா கஷ்டம். ரூமட்டாய்ட் ஆர்ட்டைரட்டிஸ் (rheumatoid arthritis) விஷயத்திலும் அப்படியே தான். வாலிபரைத்தான் இது அதிகமாகத் தாக்குகின்றது. இந்த வகை வாதமானது சாதாரணமாக முதலில் கைகளில் ஆரம்பமாகின்றது. விரல் மூட்டுகள் வீங்கி, விறைத்துப் போவதால்

எதையும் பிடிக்க இயலாது. மணிக்கட்டுகள் வளைந்து போகலாம். கைத் தசைகள் உபயோகப்படாமல், தேய்ந்து போகின்றன. தூக்கம் வராது. பசி உண்டாகாது. வலி வருஷக் கணக்காகத் தொடர்ந்து இருக்கலாம். அல்லது பருவகாலத்திற்கேற்றவாறு விட்டு விட்டும் உண்டாகலாம்.

இந் நோயால் அவதிப்படுகையில், காமாலை நோய் உண்டாகுமானால், சில சமயங்களில் அது முற்றிலும் நீங்கி விடுகின்றது. இதன் இரகசியம் இன்னதென்று இன்னும் தெரியவில்லை. ஒரு வேளை காமாலையால் வாதரோக எதிர்ப்புச் சக்தி உடலில் அதிகப்படலாம். இவ்வியாதியால் கஷ்டப்படுகையில், காமாலையை வரவழைத்துக் கொள்வது சுலபம் அல்ல. சில பெண்களுக்குக் கர்ப்பம் உண்டானால், வாதம் நீங்கி விடுகின்றது. இதற்கும் காரணம் தெரியவில்லை. மனக் கிளர்ச்சியால் எவ்விதக் கோளாறும் இல்லையென்றால், கர்ப்ப காலத்தில் அவர்கள் நல்ல ஆரோக்கியமும் சந்தோஷமும் அனுபவிக்கின்றனர்.

இந்த நோயால் முள்ளந்தண்டின் எல்லா மூட்டுகளுமே கேடு அடையலாம். இதற்கு அநேக மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. எல்லாம் தற்கால சாந்தியைத் தான் அளிக்கின்றன. ஆஸ்ப்ரின் இன மருந்துகள், ஸாலிஸிலேட்டிகள் (salicylates) வியாதி ஆரம்பத்தில் சற்று பிரயோஜனமாக இருக்கலாம். ஸாலிஸிலேட்டுகள் அநேக ஆண்டுகளாக உபயோகிக்கப்பட்டு வருகின்றன. மூட்டுகள், தசைகள் வீக்கம், வலிகளுக்கு இவை எவ்வாறு, என்ன பரிகாரம் அளிக்கின்றன என்பது சமீப காலத்தில் தான் கண்டு பிடிக்கப்பட்டது. கண்டு பிடித்தவர்கள் இங்கிலாந்து தேசத்தின் ஆராய்ச்சியாளர்களே. ஆஸ்பிரின் ஆஸ்ப்ரோ போன்ற மருந்துகள் சிறுநீர்ப் பிரித்திகளோடு இணைந்துள்ள அட்ரீனல் (adrenal) என்ற சுரப்பிகளில் கார்டிஸோன் (cortisone) என்னும் ஹார்மோனை உற்பத்தியாக்குகின்றன. மூளையின் அடியில் இருக்கும் பிட்டுயிட்டரி (pituitary) சுரப்பியிலிருந்து உற்பத்தியாகும் ஏஸிடிஎச் (ACTH) என்னும் ஹார்மோனும் அட்ரீனல் சுரப்பிகளில் இதே வேலையைச் செய்கிறது. இவ்வாராய்ச்சியாளர் இதனால் தான் வலி தணிகின்றது எனத் தெரிந்து கொண்டனர். ஆகையால் இவ்வியாதிக்கு இக்காலத்தில் ஏஸிடிஎச் கார்ட்டிஸோன் என்னும் இவ்விரு ஹார்மோன்களையே பரவலாக உபயோகிக்கின்றனர். இவை நோயைக் குணமாக்குவதில்லை. கொஞ்சம் சுகம் தான் என்ற உணர்ச்சியை நோயாளிக்கு உண்டாக்குகின்றன. நோயாளி தன் ஆர்வத்தினால் தனது தேவைக்கு மிஞ்சி ஹார்மோன்களை உட்செலுத்தினால் மிகுந்த அபாயம்

உண்டு. அதனால் ஒரு நல்ல பயிற்சி அடைந்த டாக்டரின் கண்காணிப்பிற்கு உட்பட்டே இவை உபயோகிக்க வேண்டும். இவை உபயோகிப்பதை நிறுத்தினால், நோய் பழைய நிலைமையை அடையலாம். டெராமைஸின் (terramycin) போன்ற ஆண்டிபையாடிக்ஸ் சில கேஸுகளுக்கு அனுகூலமாகலாம். சிலர் தங்கத் திராவகத்தைக் குத்துகின்றனர். நோயைக் குணப்படுத்துவதற்கான மருந்து எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை

எல்லாவற்றிலும் மிகவும் பிரயோஜனமானது எக்ஸ்–ரே சிகிச்சைதான். இத் துறையில் விசேஷ பயிற்சி பெற்ற மருத்துவரே இதைச் செய்ய வேண்டும். நோயின் ஆரம்ப காலத்தில் சிகிச்சை ஆச்சரியமான விதமாகக் குணம் அளிக்கின்றது.

எப்பொழுதும் நல்ல பாதரட்சைகளை அணிந்துகொள்ள வேண்டும். வியாதியினால் படுக்கையிலேயே இருக்க வேண்டியவர்களுக்கு மரப்பலகையால் செய்த கட்டில் நல்லது. முதுகு வளையாதபடி உதவியாக இருக்கும் கால் மடக்குகளில் தலையணை வைத்துக் கொள்ள வேண்டும். நோயாளிக்குப் போதுமான தூக்கமும் ஓய்வும் வேண்டும். சரியான வேளைகளில் உணவு கொள்ள வேண்டும். சுத்த ஜலம் ஏராளமாகக் குடிக்க வேண்டும்,

எவ்வளவு உடற்பயிற்சி செய்ய முடியுமோ அவ்வளவு செய்ய வேண்டும். ஆனால் மூட்டுகளும் தசைகளும் தளர்ந்து போக விடக்கூடாது. எவ்வித மனக் கவலையும் இருக்கக் கூடாது. சோர்வு தகாது. சோர்வு எந்தக் காரியமும் செய்ய இடம் தராது. பலஹீனம் உண்டாக்கும். சுகம் அடைவதற்கான எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும்.

''நல்வழி''

அறிவுக் கதிர்

பிறர் துன்பத்தைக் கண்டு இரங்குதல் 'மனித குணம்'; அதை நீக்குதல் தெய்வ குணம்.

—மான்

கல்விச்சாலை யொன்று திறப்பவன், சிறைச்சாலை யொன்றை மூடுபவன் ஆவான்.

—ஹியூகோ

தெய்வமே பெண்ணாக வந்தாலும் அவதூறு என்னும் நாய் அவளைப் பார்த்துக் குரையாமல் இராது.

—ஹோம்

வீரபாண்டியக் கட்டபொம்மன்!

[ம. பொ. சிவஞானம்]

நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னதாகவே வெள்ளையனை எதிர்த்து சுதந்தரப் போராட்டம் நடத்திய மாபெருந் தமிழ் வீரன் கட்டபொம்மனின் வீரஞ் செறிந்த வரலாற்றையும், அந்த அறப்போர்த் தளபதிக்கு அருமையானதோர் நினைவுச் சின்னம் அமைக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் நண்பர் ம. பொ. சிவஞானம் அவர்கள் இந்தக் கட்டுரையில் விளக்குகிறார்.

இந்தியா, அண்மையில் எத்தனையோ துறைகளில் ''நூற்றாண்டு விழா''வைக் கொண்டாடியிருக்கிறது, ரெயில்வே போக்குவரத்து ஏற்பட்ட நூற்றாண்டு; தபால் தந்தி சர்வீஸ் தோன்றிய நூற்றாண்டு; பல்கலைக்கழகம் அமைந்த நூற்றாண்டு-என அடுத்தடுத்து பல ''நூற்றாண்டு''களைக் கொண்டாடியிருக்கின்றது. அவை அனைத்தும், இந்திய நாட்டை அடிமைப்படுத்திய, இந்திய மக்கள் மீது ஆதிக்கம் செலுத்திய ஆங்கில ஆட்சியின் சாதனைகளுக்கு விளம்பரமாக அமைந்தது. இத்தனை விழாக்களையும் கொண்டாடி முடித்த பிறகு, இப்போது தான் சுதந்திரப்புரட்சி துவங்கிய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்றது.

இதிலிருந்து, இந்தியாவில் பிரிட்டிஷார் நன்கு ஆதிக்கம் பெற்ற பிறகுதான் சுதந்திரப் போர் துவங்கியது என்று உலகம் நம்புவதற்கு நாமே உதவி புரிந்துவிடுகிறோம். ஆம்; நம்மை அடிமை கொண்ட ஆங்கிலேயர் நம் நாட்டில் ரெயில் பாதைகள் போட்ட பிறகு, தபால் தந்தி சர்வீஸ் துவக்கிய பின்னர், பல்கலைக்கழகம் அமைத்துக் கொடுத்த பிறகு இந்தியருக்குச் சுதந்திர வுணர்ச்சி பிறந்தது?—அப்படித்தானே உலகம் நம்பும்!

உண்மை என்ன?

ஆனால், உண்மை வரலாறு வேறு விதமாகக் கூறுகின்றது. அதாவது 1792–ம் ஆண்டில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும் தென்னகத்தை ஆண்ட ஆற்காடு நவாபிற்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தப்படி தமிழகத்தின் மீது அரசியல் வழி ஆதிக்கம் செலுத்தவும், சிற்றரசர்களிடம் கப்பம் வசூலிக்கவும் உரிமை பெற்றனர் ஆங்கிலேயர். ஆம்; ஆங்கிலேயரிடம் பெற்ற கடனுக்காக அதைத் திருப்பிக் கொடுக்க முடியாத காரணத்தால் தாம் பெற்றி

ருந்த . அரசுரிமையைக் குத்த கைக்கு விட்டார் ஆற்காட்டு நவாப்!

கட்டபொம்மன்

அந்தக் குத்தகை ஒப்பந்தத்தை ஏற்காமல் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகளுக்குக் கப்பம் கட்ட மறுத்தனர் தமிழ் நாட்டுச் சிற்றரசர்கள். கம்பெனி வெள்ளையர்கள் துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் காட்டிப் பல சிற்றரசர்களைப் பணியவைத்தனர். என்றாலும், இறுதிவரை பரங்கியருக்குப் பணியாமல், அவர்களது கட்டளைக்கு அஞ்சிக் கப்பம் செலுத்தாமல் உறுதியோடு போர் புரிந்தனர் சில சிற்றரசர்கள். அவர்களிலே தலைமை பெற்று விளங்கினான் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பாஞ்சாலங்குறிச்சி மன்னன் வீர பாண்டியக் கட்டபொம்மன்!

முதல் முழக்கம்

பல ஆண்டுகள் கடுமையாகப் போர்புரிந்த பிறகு புதுக்கோட்டை மன்னன் தொண்டமான், எட்டய புரத்து மன்னன் போன்ற பல சிற்றரசர்கள் செய்த துரோகத்தால் ஆங்கிலேயரிடம் சிக்கி தூக்கிலிடப் பட்டு மாண்டான் அவ்வீரன். அந்தப் புண்ணியன், தியாக பரம்பரையின் முதல்வன் தூக்கில் மாண்ட புனித நாள், 1799-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ந் தேதியாகும். அந்த நாள்தான் இந்திய விடுதலைப் புரட்சி துவங்கிய முதல்நாள். "வானம் பொழியுது பூமி விளையுது மன்னவன் காணிக்குமா கிஸ்தி?" என்று வெள்ளையர்களைப் பார்த்து வீரபாண்டியன் கேட்ட கேள்விதான், இந்திய தேசபக்தனின் முதல் முழக்கம்!

கயத்தாறு என்னும் ஊரில், நாடோடிகளாக வந்த வெள்ளையர்களால் சாலை ஓரத்தில் வளர்ந்திருந்த புளியமரத்தில் தூக்கிலிடப்பட்டான் கட்டபொம்மன். அவன்தான் இந்திய சுதந்திர யுத்தத்தின் முதற் பலி - களபலி கொடுக்கப்பட்ட தேசபக்தன்!

அந்த நாளில் பிரிட்டிஷ்காரர்கள் இந்திய தேசபக்தர்களை அடைத்து வைக்க சிறைச்சாலைகளை அமைக்கவில்லை. அவர்களுடைய உயிரைப் பலி வாங்க தூக்குமேடைகளைத் தோற்றுவிக்கவில்லை. ஆம்; பிரிட்டிஷ் சாம்ராஜ்ய அரண்மனைக்கு அஸ்திவாரம் போடு முன்பே தேச பக்த தமிழர்கள் எதிர்மனை அமைத்துவிட்ட காலம் அது!

அதற்குச் சுமார் 60 ஆண்டுகளுக்குப் பிறகுதான் 1857-ம் ஆண்டுப் புரட்சி நிகழ்ந்தது.

ஊமைத்துரை

1799-ல் கட்ட பொம்மன் தூக்கில் மாண்டபோது, அவன் தம்பி ஊமைத்துரை ஆயிரக்கணக்கான தேச பக்த தமிழர்களுடன் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான். அண்ணன் தூக்கில்

மாண்ட செய்தி அம் மாவீரன் மனதில் ஆத்திரத்தை ஊட்டியது. தமிழ்நாட்டுச் சிற்றரசர்கள் எல்லாம் படை வைத்துக்கொள்ளும் உரிமை இழந்தனர். வழி வழி வீர சாகசம் புரிந்து வந்த தமிழ் மக்கள் தற்காப்புக்காகக் கூடக் கோல் பிடிக்கவும் உரிமையற்றவராயினர். தமிழருக்குற்ற இந்த இழிநிலை சிறையிலடைபட்டிருந்த ஊமைத்துரைக்குச் சினத் தீயை மூட்டியது.

1801-ம் ஆண்டின் துவக்கத்தில் ஊமைத்துரையும், அவனோடு இருந்த சில கைதிகளும் பாளையங்கோட்டைச் சிறையைத் தகர்த்தனர். அந்த சமயத்தில் ஊமைத்துரைக்கு உடம்பெல்லாம் பெரிய அம்மைப் புண்கள்! அம்மை நோய்கண்ட காரணத்தால் அவ்வீரனின் கை-கால்களிலிருந்த விலங்குகளைக் கழட்டி ஏறிந்தனர் சிறைச்சாலை அதிகாரிகள். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சிறைச்சாலையின் தலைவாயிற் கதவுகளை உடைத்தெறிந்து தன் விடுதலையைத் தானே தேடிக்கொண்டான் ஊமைத்துரை!

என்ன விந்தை! பாளையங்கோட்டையிலிருந்து சுமார் முப்பது மைல்களுக்கு அப்பாலுள்ள பாஞ்சாலங் குறிச்சியை ஒரு இரவிலே அடைந்தனர். ஊமைத்துரையும் அவரது தோழர்களும், ஆங்கிலேயர் விளைவித்த அவமானத்தால் அந்த சிற்றரசனின் நெஞ்சு புண்ணாகி யிருந்தது. அதனால் உடல் முழுவதும் நிறைந்திருந்த அம்மைப் புண்களை அவன் மறந்தேவிட்டான்!

பாஞ்சாலங்குறிச்சியை அடைந்த ஊமைத்துரை குடிமக்களைப் படை திரட்டி ஆங்கிலக் கொடுங்கோலர்களை எதிர்த்துப் பல மாதங்கள் போர் புரிந்தான். அவனுக்குப் பக்கத்துணையாக சிவகங்கை பாளையக்காரர்களான மருதுபாண்டியரும் உதவி புரிந்தனர். ஆயினும் 1801-ம் ஆண்டின் இறுதியில் ஊமைத்துரையும் மருது சகோதரர்களும் தூக்கிலிடப்பட்டனர். அத்துடன், தென்பாண்டி நாட்டின்— கட்டபொம்மன் துவக்கி வைத்த சுதந்திரப் போரின் முதற்கட்டம் முற்றுப் பெற்றது.

வேலூர் புரட்சி

அதற்குப் பிறகு 1806-ம் ஆண்டில் வேலூரிலே சிப்பாய்ப் புரட்சி நடைபெற்றது. உரிமை உணர்ச்சி படைத்த சிப்பாய்கள் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்து நடத்திய அந்தப் போரும் தோல்வியுற்றது. இது முடிந்த 50 ஆண்டுகளுக்குப் பிறகுதான், சிப்பாய்க் கலகம் என்று ஆங்கிலேயர் பெயர் வைத்த 1857-ம் ஆண்டுப்புரட்சி நடைபெற்றது.

1857-ம் ஆண்டுப் புரட்சியை "சிப்பாய் கலகம்" என்று ஆங்கிலேயர் அழைத்தது இந்தியரின் சுதந்திர உணர்ச்சியை உலகத்தார் அறிந்து கொள்ளாமல் திரையி[illegible] அக்

800 069
186320

பாண்டியக் கட்டபொம்மன் இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய வீரன்" எனப் புகழுரை வழங்கியிருக்கின்றார். அவர் தமது சுய சரிதையில் தாம் பிறந்த ஒட்டப்பிடாரத்தைப்பற்றிக் கூறும்போது,

அருந்திறன் நாட்டி
　　ஆங்கிலரோடமர்
பொருந்திய கட்ட
　　பொம்மு நாயகன்
பாஞ்சால நாயகன்
　　பண்புடனமர்ந்த
பாஞ்சால நகர்
　　பக்கத்துளது.

என்று கூறுகின்றார். வீரபாண்டியன் விடுதலைக்காகப் போராடிய வீரனென்பதற்கு இதைவிடச் சான்று வேண்டுமா?

கேரள அரசாங்கம் 1808-ல் திருவனந்தபுரம் ராஜ்யத்தில் தளவாயாக இருந்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடி உயிர்த் தியாகம் புரிந்த தளவாய் வேலுத் தம்பிக்கு ஞாபகார்த்தம் அமைக்கின்றது. ஆம்; இந்த ஆகஸ்ட் 15-ந் தேதியில்தான்.

ஞாபகச் சின்னம்

போகட்டும். கட்டபொம்மனுக்கு ஞாபகச் சின்னம் அமைக்க தனி நபர் யாரேனும் முன் வந்தால் அரசாங்கம் உதவி புரியும் என்று கூறினர் நிதி அமைச்சர். அவருடைய உறுதிமொழியை நம்பி, "கட்டபொம்மனுக்கு ஞாபகச் சின்னம் அமைக்க தமிழ் மக்களுடைய ஆதரவுடன் நான் பொறுப்பேற்கிறேன். அரசாங்கத்தின் உதவி எத்தகையதாக இருக்கும்? செயின்ட் ஜார்ஜ் கோட்டை நுழைவாயிலில் கட்டபொம்மன் சிலையை நிறுத்த அரசாங்கம் இடங்கொடுக்குமா" எனக் கேட்டு எழுதியிருந்தேன்.

கடிதம் எழுதி இரண்டு வாரங்களாகியும் இதுவரை பதில் இல்லை.

எப்படியும் இம்மாத இறுதிக்குள் அரசினரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்குமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

அது எப்படியாயினும் போராடியேனும் அரசினருடைய ஆதரவைப் பெற்று, அரசாங்கத்தின் கவுரவத்திற்குரிய ஒரு இடத்தில் வெகு விரைவில் கட்டபொம்மனுடைய ஞாபகச் சின்னத்தை அமைத்தே தீருவேன்.

அஞ்சலி

இந்த நம்பிக்கையோடு நாடெங்கும் கொண்டாடும் சுதந்திரப் புரட்சி விழாவில் (நூற்றாண்டு விழா என்ற பெயரிலல்ல) தமிழ் மக்கள் பங்கு கொள்ள வேண்டுகின்றேன். அவர்கள் சார்பில் தமிழ் இனத்தவரின் தொண்டன் என்ற முறையில் நானும் பங்கு கொள்கின்றேன். சுதந்திரப் போரைத் துவக்கி வைத்த முதல்வன் கட்டபொம்மன் திருநாமத்தை நன்றியுள்ள ஒரு இந்தியன்—தமிழன்—தேசபக்தன்

என்ற முறையில் வாயார வாழ்த்துகின்றேன். அவரைப் பின்தொடர்ந்து உயிர்த் தியாகம் புரிந்த ஊமைத்துரை, மருது பாண்டியர் மற்றும் பல்லாயிரவர்க்கும் தலை வணங்கி அஞ்சலி செய்கின்றேன். பேசும்மொழியால் மலையாளியாயினும், பிறந்த நாட்டால் தமிழனை ஆங்கிலேயரை எதிர்த்து உயிர்த்தியாகம் புரிந்த தளவாய் வேலுத்தம்பியின் புகழ் வாழ்க என வாழ்த்துகின்றேன்.

1857-ம் ஆண்டுப் புரட்சியில் பெண் குலமே பெருமைப்படத்தக்க வகையில் – பெற்றெடுத்த இந்தியாவும் இறுமாப்புக் கொள்ளக்கூடிய பான்மையில் வீரப் போர் புரிந்த ஜான்ஸி ராணி லட்சுமிபாய்க்கு அஞ்சலி செலுத்துகின்றேன். வடநாட்டுக் கண்மணியாம் அவ்வீராங்கனையோடு சேர்ந்து போர் புரிந்த அத்தனை வீரர்களுக்கும் கரங்கூப்பி, சிரந்தாழ்த்தி அஞ்சலி செலுத்துவோமாக!

—"தி. தந்தி"

பறித்த பூக்கள்

மிகப் பெரிய குற்றம் எது தெரியுமா? நம்மிடம் குற்றமே இல்லை என்று எண்ணிக் கொண்டிருப்பது.

—தாமஸ் கார்லைல்

தங்குவதற்கு ஒரு மரநிழல்—உண்பதற்குக் கொஞ்சம் ரொட்டி—இவற்றோடு கொஞ்சமும் குறையாத சுதந்தரம்—இந்த மூன்றைமட்டும் எனக்குக் கொடுங்கள். வேறு எதுவும் வேண்டாம்.

—அலெக்சாண்டர் போப்

மிகச் சில சொற்களில் பொதிந்து கிடக்கிற மிகப் பெரிய ஆற்றல்—இதனை மிகத் தெளிவாக விளக்குவதே மிகச் சிறந்த கவிதை.

—எமர்சன்

இளமை, வாழ்க்கையின் பகற்பொழுது என்றால், முதுமை, அதன் இரவுப் பொழுது, பகலில் ஞாயிற்றின் ஒளி உண்டு என்றால், இரவில் விண்மீன்களின் ஒளி உண்டு.

—லாங்பெல்லோ

வாழ்க்கை என்பது ஓர் அந்நியமொழி. அதனை எல்லா மனிதர்களுமே தவறான முறையில் உச்சரிக்கிறார்கள்.

—கிரிச்தபர் மார்லி

தான் என் சகுந்தலாவும் சென்றாள்!

நான் சுமத்திய வீண் பழியைத் தாளாது, அன்று எனக்காக மன மகிழ்ச்சியோடு மரணத்தைத் தழுவினாள்! இன்று அவளுக்காக நான் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறேன்! அன்று அவளைத் தூற்றினேன்! இன்று சகுந்தலாவைப் போற்றுகிறேன்! இதுதான் என் போன்றோர் நிலையா?

3

சகுந்தலாவை எண்ணும் போதே அவளது சுந்தரப் புன்னகையும், சுழன்றுகொண்டேயிருக்கும் விழிகளும், எழில் கொழிக்கும் அழகும், அலை அலையாகச் சுருண்டு கிடக்கும் கூந்தலை அவள் அள்ளி முடித்திருக்கும் தோற்றமும்தான் என் மனத்திரையிலே தோன்றும்!

அவளது கயல் விழிகளின் சுழற்சியிலே கட்டுண்டேன்! மோனக் கிறக்கத்தில் ஆழ்த்தும் சகுந்தலாவின் மோகனப் புன்னகையிலே என் இதயத்தைப் பறிகொடுத்தேன்!

சகுந்தலா, என் தூரத்து உறவு! சின்ன வயது முதல் நாங்கள் இருவருமே சேர்ந்து விளையாடுவோம்; பள்ளிக்குப் போவோம். நாங்கள் வளர்ந்தோம்; எங்கள் நேசமும் வளர்ந்தது! கதைகளில் படிப்பதுபோல எங்கள் காதல் வாழ்விலே 'வில்லன்கள்' வரவில்லை. பெற்றோரும், மற்றோரும் மகிழ நான் சகுந்தலாவின் கரம் பற்றினேன், எங்கள் வாழ்விலே இன்பத் தென்றல் வீசியது!

புதிதாகச் சென்னையில் நிறுவப்பட்ட எங்கள் அலுவலகத்தின் கிளைக் காரியாலயத்துக்கு நான் மானேஜராக நியமிக்கப்பட்டேன். ஆகவே நானும், சகுந்தலாவும் சென்னைக்குக் குடியேறினோம்.

அழகான பங்களா, வேண்டிய இடத்துக்குச் சென்று வர கார், நல்ல வருவாய்! மனிதன் சுகமுடன் வாழ என்னென்ன தேவையோ அதெல்லாம் இருந்தன! அதே சென்னை நகரில் எத்தனை லட்சம் மக்கள், ஒரு வேளை உணவுக்குக் கதியற்றவர்களாகத் தெரு ஓரங்களில் படுத்துக் கிடக்கின்றனர்! அந்தப் பஞ்சையர் கூட்டங்களுக்கு மத்தியிலேதான் எங்கள் கார் பவனி நடக்கும்! அவர்கள் 'பசி பசி' என்று முகாரி எழுப்பும் போதுதான், "இன்பத் தென்றல் தாலாட்டுதே!" என்று மோகனம் இசைத்துக்கொண்டிருப்போம் நாங்கள்!

அலுவலகத்திலிருந்து ஒரு நாள் மாலை வழக்கத்துக்கு முன்னதாகவே வீடு திரும்பினேன். உடைகளை மாற்றிக் கொண்டு, நான் என் அறையில் சென்று உட்காருவதற்கும், சகுந்தலா காப்பி கொண்டு வரு

வதற்கும் சரியாக இருந்தது. ஆனால் அவளது முகத்தில் அந்த வழக்கமான புன்சிரிப்பைக் காணவில்லை!

"ஏன் சகுந்தலா, உடம்புக்கு ஏதாவது..........? டாக்டரை அழைத்து வரட்டுமா?" என்றேன் அனுதாபத்தோடு.

"வேண்டாம்; ஏனோ தலையை வலிக்கிறது." என்றாள் சகுந்தலா.

"அப்படியானால் நீ இன்று பீச்சுக்கு வரவில்லையா?"

"இல்லை! நீங்கள் போய் வாருங்கள்!"

நான் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டேன். ஆனால் என் சகுந்தலா அருகில்லாதது எனக்குப் பெரும் குறையாக இருந்தது. நீலக் கடல் அலையின் கோலக் காட்சிகளை என்னால் ரசிக்கவே முடியவில்லை. வெண்மணற் பரப்பின் மீது உட்கார்ந்து கொண்டு இன்பமாக உரையாடிக் கொண்டிருக்கும் தம்பதிகள் — கடற் கன்னியின் எழிற்காட்சியைப் பருகியபடி நின்றுகொண்டிருக்கும் காதல் ஜோடிகள்—இவர்களையெல்லாம் பார்க்கும்போது என் சகுந்தலா என் அருகில் இல்லையே என்ற பெரும் வேதனை என் உள்ளத்தை வாட்டியது. எங்கெங்கோ அலைந்துவிட்டு இரவு ஒன்பதரை மணிக்கு வீடு திரும்பினேன்!

சாய்வு நாற்காலியில் படுத்தபடியே உறங்கிக்கொண்டிருந்தாள் சகுந்தலா. முன்னால் உள்ள சிறிய மேஜைமீது ஏதோ எழுதப்பட்டுச் சில காகிதங்கள் கிடந்தன. அந்த எழுத்தைப் பார்த்ததும் அது என் சகுந்தலாவின் எழுத்துதான் என்று புரிந்து கொண்டேன்! எடுத்து வாசித்தேன். என் தலை சுழன்றது. தலைமட்டுமா? உலகமே சுழன்றது! அது ஒரு காதல் கடிதம்!

ஆருயிர்க் காதலருக்கு,

"நாமிருவரும் சின்னஞ் சிறு வயது முதல் ஓடியாடி விளையாடிய நிகழ்ச்சிகள் இன்னும் மனத்தைவிட்டு அகலவில்லை. நம் அன்பு உள்ளங்களைப் புரிந்து கொள்ள முடியாத என் பெற்றோர்கள், ஒரு பித்தனுக்கு என்னை வாழ்க்கைத் துணைவியாக்கிவிட்டனர். மனைவி என்ற கடமையிலிருந்து வழுவ விரும்பாது, நான் அவனிடம் அன்புள்ளவள்போல் நடந்து வருகிறேன். என் மனம் ஓயாது உங்களையே நினைத்து உருகிக் கொண்டிருக்கிறது......."

இதற்குமேல் என்னால் படிக்க முடியவில்லை. அவள் என் மீது கொட்டும் அன்பு அத்தனையும் வெறும் ஏமாற்று வித்தைதானா? ஐயோ! எவளை உத்தமி என்று எண்ணி வந்தேனோ, அவள் மாற்றானின் காதலி! என் மனைவி சகுந்தலாவுக்கு ஒரு காதலன்! வெறுப்போடு அவ

னைத் திரும்பிப் பார்த்தேன். கையில் பேனாவைப் பிடித்தபடி உறங்கிக் கொண்டிருந்தாள்! அவளது முகத்திலே படர்ந்து கிடந்தது ஆழ்ந்த அமைதி! என் உள்ளத்திலோ, எரிமலை தீக்குழம்புகளை வாரி இறைக்கத் தொடங்கிவிட்டது!

கையிலிருந்த கடிதங்களை இருந்தபடியே வைத்துவிட்டு, படுக்கையில் சென்று விழுந்தேன். கட்டிப்போடாத இளங்கன்று போல மனம் எங்கெங்கோ துள்ளி ஓடிக்கொண்டிருந்தது!

விடிந்தது! விடியாத என் வாழ்வை எண்ணியபடியே எழுந்தேன். இயந்திரம்போலக் காலைக் கடன்களை முடித்துவிட்டு அலுவலகம் சென்றேன். சகுந்தலாவுடன் ஒரு வார்த்தைகூடப் பேசவேயில்லை!

அதன் பிறகு ஒன்றின்பின் ஒன்றாக ஏற்பட்ட நிகழ்ச்சிகள் தான் என் வாழ்விலேயே சோகக் கறை படிந்துவிட்ட நாட்கள்!

சகுந்தலாவின் பெற்றோர்களுக்கு உடனடியாக தந்தி ஒன்று கொடுத்தேன். அவர்களுக்கு மத்தியிலேயே சகுந்தலா 'விபசாரி' என்று தூற்றினேன். இப்படிப்பட்ட ஒருத்தி, எனக்கு மனைவியாக இருக்கத் தகுதியற்றவள் என்று பேசி, பெற்றோருடன் பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டேன்!

நான் சகுந்தலாவை ஏன் இப்படி ஏசிப் பேசுகிறேன் என்பதை எவரிடமும் சொல்லவும் இல்லை.

4

சாய்வு நாற்காலியில் படுத்தபடி, அன்றைய தினசரிப் பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்தேன். உள்ளமும் உடலும் ஒருங்கே சோர்ந்து கிடந்தன.

"சார், போஸ்ட்!" என்றபடி தபால்காரன் ஒரு பத்திரிகையையும். கவரையும் போட்டுவிட்டுப் போனான். முகவரியைப் பார்த்தேன். அவையிரண்டும் "மணிக்கொடி" பத்திரிகை அலுவலகத்திலிருந்து சகுந்தலாவுக்கு வந்தவை, வெறுப்போடு கடிதத்தை உடைத்தேன். கடிதம் பேசியது:—

சகுந்தலா அம்மையார் அவர்கட்கு,

வணக்கங்கள், நாங்கள் நடத்திய சிறு கதைப் போட்டியில், சிறந்த சிறு கதை என தங்களுடைய "காதலரே!" என்ற கதையைத் தேர்ந்தெடுத்துள்ளோம். கதை பிரசுரமான பிரதியும் இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இப்போட்டிக்குரிய ரூபாய் நூறும், அடுத்த வாரம் நடைபெறும் விழாவில் தங்களிடம் தரப்படும்.

ஆசிரியர்,
'மணிக்கொடி'

ஆவலோடு 'மணிக்கொடி' இதழைப் பிரித்தேன். 'ஐயோ!' என அலறியது என்வாய். ஆம்! அன்று எதைக் காதல் கடிதம் என்று எண்ணி என் சகுந்தலாவை ஏசி விரட்டினேனோ, அதுதான் அங்கு கதையாக உருப்பெற்று என்னைப் பார்த்துச் சிரித்தது!

எப்படிப்பட்ட தவறு இழைத்துவிட்டேன்? பத்திரிகையிலுள்ள ஒவ்வொரு எழுத்தும் என்னை வேலாகக் குத்தியது!

அவசர அவசரமாகக் கோவைக்கு ரயில் ஏறினேன். என்ன செய்வது? நான் என் மாமாவின் வீட்டை அடையும் போது உள்ளிருந்து 'ஓ' வென்ற ஒப்பாரியின் ஒலம்தான் என்னை வரவேற்றது! ஆம்! என் சகுந்தலா, மானத்துக்கு அஞ்சி, ஒரு துளி விஷத்தில் தன் உயிரைப் போக்கிக்கொண்டாள்!

உயிரற்ற அவளது உடலின் மீது விழுந்து அழுதேன்; புரண்டேன். ஆனால் பயன்? 'மாண்டார் வருவரோ' என்ற வேதாந்தத்தால் வெந்து விடுவதா என் வேதனை?

அமைதி அமைதி என்று அலறுகிறது என் மனம்! அதனைத் தேடி எங்கெங்கோ அலைந்தேன்! வேலைபோயிற்று; ஆனால் என் வேதனை போகவில்லை. முடியாத நாவலைப்போல அது என்னைத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது!

இன்று என்னைப் பார்க்கும் பலரும் பைத்தியம் என்கின்றனர். இதோ என் எதிரே உட்கார்ந்திடும் பெண்கூட, அவள் கணவனிடம் என்னைப்பற்றி ஏதோ கூறிச் சிரிக்கிறாள்! அவள் கணவனும் சிரிக்கிறான்!

அவர்கள் சிரிக்கிறார்கள்! நான் அழுகிறேன்! எங்கள் எல்லோரையும் சுமந்தபடி இன்னும் ஓடிக்கொண்டேயிருக்கிறது அந்த ரயில்!

—"போர்வாள்"

அறிவுக் கதிர்

மனமுவந்து புகழாதவர் மட்டமான அறிவுடையர் ஆவர்.

—வாவனார்கஸ்

முட்டாளின் உயர்ந்த ஞானம் மௌனம்; அறிஞனின் பெரிய சோதனை பேச்சு.

—குவார்ல்ஸ்

உள்ளத்தைக் கவர்ந்த வெள்ளி விழா

சென்ற 20, 21-7-'57 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் சென்னை சர் தியாகராயர் கல்லூரியில் அமைக்கப் பெற்ற மணியரசர் பந்தலில் சென்னை மாணவர் மன்றத்தின் வெள்ளி விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது.

முதல் நாள் நிகழ்ச்சிகள்

20-7-'57 காலை 8-30 மணிக்கு முதல் நாள் தலைவர் நாவலர் டாக்டர் S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் வாலாஜாபாத் இந்து மத பாடசாலை மாணவர்களின் இன்னிசை முழக்கத்துடன் மன்ற நிலையத்திலிருந்து வெள்ளி விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் தமிழ்க் கொடி ஏற்றுகையில், சேர சோழ பாண்டிய நாடுகளை ஒற்றுமைப்படுத்தத் தொண்டை நாடு முயன்று வெற்றி பெறும் என்று குறிப்பிட்டார்கள். பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் அவர்கள் வரவேற்புரையில் நாவலர் அவர்களின் அருமை பெருமைகளைப்பற்றிப் பேசினார்கள்.

மாணவர் மன்ற ஓவியக் கண்காட்சி கல்லூரி முதல்வர் உயர்திரு M. K. சண்முகம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவர் தம் திறப்புரையில் மன்ற வளர்ச்சியில் பெரும்பாலான கல்லூரி முதல்வர்களும் மாணவர்களும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென வற்புறுத்திக் கூறினார். வழக்கம் போல் ஆயிரக் கணக்கான மக்கள் ஓவியக் கண்காட்சியைக் கண்டு களித்தார்கள். அமைச்சர் தணிகை உலகநாதர் அனைவர்க்கும் நன்றி கூறினார்.

அன்று மாலை 4-மணிக்கு இசை மணி திரு. சீர்காழி கோவிந்தராசன் இன்னிசை விருந்துடன் கூட்டம் தொடங்கியது. அவர்தம் இன்னிசை மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. உயர்திரு T. புருஷோத்தம், M. L. C. அவர்கள் மன்ற வரலாற்றை விளக்கிக் கூறி விழாவுக்கு வந்திருந்த அறிஞர்களைப் பாராட்டி வரவேற்றார். நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் தமது தலைமைப் பேருரையில் மன்றத்தின் தொண்டுகளைப் பாராட்டியதோடு மாணவர்கள் உடல், உள்ளம், அறிவுத்துறை இம் மூன்றிலும் சிறந்திருக்க வேண்டுமென விளக்கிக் கூறினார். அமைச்சர் புலவர் கோ. வில்வபதி அவர்கள் சுமார் 300 பக்கங்கள் கொண்ட 24, 25-ஆம் ஆண்டறிக்கையின் முக்கியமான செய்திகளையும் ஆண்டு வரவு செலவுக் கணக்குகளையும் விளக்கிக் கூறினார்.

வெள்ளி விழாவினைத் திறந்து வைத்தருளிய மதிப்பு மிக்க அமைச்சர் C. சுப்பிரமணியம் அவர்கள் மன்றத்தின் பலதிறத் தொண்டுகளைப் பாராட்டினார்; மாணவர் அரசியல் விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மதிப்பு மிக்க அமைச்சர் லூர்து அம்மையார் பரிசு வழங்கும் போது, "குழந்தைகளும் கல்லூரி மாணவ மாணவியரும் பரிசு பெறுவதைப் பார்த்தால் எனக்கும் 'இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளலாமா' என்னும் பேரார்வம் உண்டாகிறது" என்றார். உயர்திரு T. M. நாராயணசாமிப் பிள்ளை யவர்கள் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் படத்தைத் திறந்து வைக்கும் போது செட்டியார் அவர்கள் பாரத தேசத்திலேயே மிகச் சிறந்த பெரியோர்களில் ஒருவர் என்றும் ஆற்றல் நிறைந்தவர் என்றும் குறிப்பிட்டார். தேசிய கவி பாரதியாரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்த நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் அமரகவி பாரதியாரின் தகுதிக்கு ஈடாக இன்று எவருமே இல்லை என்று தெரிவித்தார். மன்றத் துணைத் தலைவர் உயர் திரு. வல்லை பால சுப்பிரமணியம் அவர்கள் அனைவர்க்கும் நன்றி கூறினார். அன்று இரவு 7 மணிக்குமேல் குடந்தை T. B. சகோதரிகளின் (பாஜி, கிரிஜா) நடன விருந்து நடைபெற்றது. அக் கலைநிகழ்ச்சி வந்திருந்தோர் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்தது. அறிஞர் T. புருஷோத்தம் அவர்கள் இரு குழந்தைகளைப் பாராட்டி அவர்களுக்குப்பரிசளித்தார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

21-7-57 ஞாயிறு அன்று காலை சென்னைத் துணை மேயர் உயர்திரு K. ராமதாஸ் M. C. அவர்கள் ஏழைகளுக்கு உணவளிக்கும் நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார்கள். உயர் திருவாளர்கள் K. ஆறுமுகம் M. C., T. M. முத்துவேலு, P. R. வடிவேல் முதலியார் ஆகியோர் உடனிருந்து உதவினார்கள். அன்று மாலை நிகழ்ந்த கூட்டத்தில் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் அனைவரையும் வரவேற்று மன்றவளர்ச்சிக்குக் காரணமாயிருந்த எல்லோரையும் முறையாகப் பாராட்டினார். இரு நாட்களிலும் பங்கு கொண்ட பேரறிஞர்களுக்குத் திரு. புலவர் M. S. வேங்கடாச்சாரியார் அவர்களால், புலவர் தணிகை உலகநாதர் பாடிய வரவேற்பு வாழ்த்து மலர்கள் இன்னிசையுடன் படித்தளிக்கப்பட்டன. அந்தப் பாடல்களைப் படிக்கும்போது மக்கள் தம் கைத்தட்டலால் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். முத்தமிழ்க் காவலர் உயர்திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் சுமார் 1½ மணி நேரம் தலைமையுரையை மிக அருமையாகவும், அழகாகவும் ஆற்றினார். தற்காலத் தமிழர்

நிலை முதலியவற்றையும் விளக்கி, மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய தொண்டுகளை எடுத்துக் கூறினர்.

சென்னை நகராண்மைக் கழகத் துணையாணையாளர் அறிஞர் N. சங்கரனவர்கள் 300 பக்கங்களுக்கு மேற்பட்ட மாணவர் மன்ற வெள்ளிவிழா மலரினை வெளியிடும் போது அம் மலரின் மேலட்டை வனப்பினையும், நூற்றுக் கணக்கான படங்களின் சிறப்பினையும், அறிஞரால் எழுதப்பட்ட கட்டுரைகளின் உயர்வினையும் விளக்கிக் கூறினர்.

டாக்டர் பாரதியார் அவர்கள் தலைமையில் தேவாரம் வேதாசல முதலியார், பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார், வா. தி. மாசிலாமணி முதலியார், பெரும் புலவர் S. S. அருணகிரிநாதர், அறிஞர் வ. சுப்பையாப் பிள்ளை முதலியவர்களுக்கு முறையே திருமறை இன்னிசைப் புலவர், தமிழ் மூதாட்டியார், பொதுநலப் புரவலர், ஆசிய மணி, தமிழ் நூல் காவலர் என்று மன்றத்தினர் சார்பில் பட்டங்கள் வழங்கப்பட்டன. அக்காட்சி மிகவும் கவர்ச்சிகரமாய் இருந்தது. வெள்ளம்போல் திரண்டு வந்த மக்களின் வாழ்த்தொலி வானைப் பிளந்தது. குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் கலை வள்ளல் R. M. அழகப்ப செட்டியார் அவர்கள் படத்தைத் திறந்து வைத்து வள்ளல் அவர்களின் அரிய பெரிய அறச் செயல்களைக் குறித்து விளக்கிப் பேசி அவருடைய அரிய சாதனைகளை உலகம் இன்று வியந்து பாராட்டுகிறது என்று தெரிவித்தார். அறிஞர் C. N. அண்ணாத்துரை அவர்கள் மன்றத்தின் ஆக்க வேலைகளை பலபடப் பாராட்டி, மாணவர்கள் அரசியலில் கலக்காதிருக்க வேண்டுமானல், அரசாங்கமும் அதற்கேற்ற வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்று கூறினர். உயர்திரு டாக்டர் மு. வரதராசனர் அவர்கள் ஐந்து விரல்களையும் ஒப்புமை காட்டி, அவை சமயம் நேரும்போது உயர்வுதாழ்வு இன்றி ஒத்துழைப்பது போன்று நாமும் ஒத்துழைக்க வேண்டுமென்றார் உயர்திரு M. R. பெருமாள் அவர்கள் பேசும்போது சிரிப்பில் வெற்றி அடங்கியிருக்கிறது என்றும், சிரித்துக் கொண்டே எல்லாச் செயல்களையும் சாதிக்க முடியும் என்றும், சிரிப்பதைத் தவிரச் சிறந்த செல்வம் வேறில்லை என்றும், குறிப்பிட்டார். திருவள்ளுவர் திருநாளுக்கு விடுமுறை விடுதல் முதலிய அரிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. மன்றச் செயலாளர், புலவர். தணிகை. உலகநாதர் வெள்ளி விழாவின் வெற்றிக்குக் காரணமாயிருந்த அனைவருக்கும் நன்றி கூறினர்.

இரண்டாம் நாள் இரவு மன்றத்தோடு தொடர்புடைய பள்ளிக்கூடக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN
at the 'Venkatesan Press,' 94-95, New St., Mannady, Madras-1.

86328

வீரபாண்டியன் தமிழ் வாசகம்

இராசாம்பாள் கோவிந்தராசன், M. A., L. T.

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	4	0	25	19–5–'54
இரண்டாம் வகுப்பு	0	5	0	25	19–5–'54
மூன்றாம் வகுப்பு	0	8	0	25	19–5–'54
நான்காம் வகுப்பு	0	9	0	25	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	10	0	25	19–5–'54

மாதிரிப் பிரதிக்கு ரூ. 1–2–0 அனுப்பவும்.

கதைப் புத்தகங்கள்

எஸ். எஸ். அருணகிரிநாதர்.

பாலர் நல்ல கதைகள்					
நான்காம் வகுப்பு	0	5	0	28	19–5–'54
பாலர் கதா போதினி					
ஐந்தாம் வகுப்பு	0	5	0	29	19–5–'54

இந்த இரண்டு புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0–5–0 அனுப்பவும்.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

M. விவேகானந்தா, B. Sc., L. T.

மூன்றாம் வகுப்பு	0	5	0	...	...
நான்காம் வகுப்பு	0	7	0	9	10–4–'57
ஐந்தாம் வகுப்பு	0	8	0	9	10–4–'57

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் ரூ. 0–10–0 அனுப்பவும்

புதிய தேச ஆட்சி முறை

D. சிவசங்கர ராவ், B. A., L.T.

மூன்றாம் வகுப்பு	0	5	0	11	19–5–'54
நான்காம் வகுப்பு	0	7	0	11	4–4–'56
ஐந்தாம் வகுப்பு	0	8	0	10	4–4–'56

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0–10–0 அனுப்பவும்.

Regd No. M. 5018.

புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B. A., L. T.

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மூன்றாம் வகுப்பு	0	8	0	6	4–4–'56
நான்காம் வகுப்பு	0	10	0	6	4–4–'56
ஐந்தாம் வகுப்பு	0	12	0	5	10–4–'57

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–15–0 அனுப்பவும்.

நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூத்தி, M. A., L. T.
T. S. உமாபதி, M. A., L. T.

மூன்றாம் வகுப்பு	0	5	0	11	19–5–'54
நான்காம் வகுப்பு	0	7	0	9	4–4–'56
ஐந்தாம் வகுப்பு	0	9	0	10	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–11–0 அனுப்பவும்.

தமிழ் இலக்கணம்

T. S. உமாபதி, M. A., L. T.

4, 5–வது வகுப்புகளுக்கு	0	5	0	8	4–5–'55

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–2–0 அனுப்பவும்.

சிறுவர் பூகோளம்

T. S. உமாபதி, M. A., L. T.

இரண்டாம் வகுப்பு	0	5	0	13	19–5–'54

V. K. சேஷாத்திரி, B. A., L. T.

மூன்றாம் வகுப்பு	0	7	0	12	19–5–'54
நான்காம் வகுப்பு	0	10	0	4	4–5–'55
ஐந்தாம் வகுப்பு	0	12	0	9	4–4–'56

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 1–1–0 அனுப்பவும்.

Mother India English Reader Primer—I 0—5—0.

மாதிரிப் பிரதிக்கு ரூ. 0–2–0 அனுப்பவும்.

Venkatesan Press, Madras–1.